Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579 - 2113
அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்
facebook.com/nimirvu
www.nimirvu.org
பார்வை – 9 ஜப்பசி, 2017 பக்கங்கள் – 28 விலை – ரூபா 20.00



## வடக்கு – கிழக்கு இணைப்பு உரையாடல்கள் தொடரவேண்டும்



## இது சந்திக்கு வரவேண்டிய சங்கதி



## தாரா வளர்ப்பில் சாதிக்கும் இளம் பெண்




# வேண்டும் விடுதலை




ஆராயும் அறிவே நிமிர்வு



# வடக்கு- கிழக்கு இணைப்பு உரையாடல்கள் யாழ். பல்கலையில் தொடர வேண்டும்

தொகுப்பு – செல்வநாயகம் ரவிசாந்

எங்களுடைய அரசியல் தலைமைகள் இதுவரை வடக்கு – கிழக்கு இணைப்புக் குறித்தான எந்த உரையாடல்களையும் வெளிப்படுத்தாமை வருத்தமளிக்கிறது. இந்த விடயம் அரசியல் தலைமைகளுக்குரிய முக்கியமான பொறுப்பாகும். ஆனால், புலமை சார்ந்த தளத்திலிருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இந்த வாய்ப்பைத் தவறவிடக் கூடாது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட அரசியல் ஆய்வாளருமான கலாநிதி கே.ரி. கணேசலிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

புதிய அரசியலமைப்பின் இடைக்கால வரைபு தொடர்பான திறந்த கலந்துரையாடல் 11.10.2017 புதன் கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. குறித்த கலந்துரையாடல் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் சட்டத்துறைத் தலைவர் கலாநிதி குமாரவடிவேல் குருபரன், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சிவசுப்பிரமணியம் ரகுராம் ஆகியோரும் பேச்சாளர்களாகக் கலந்து கொண்டு உரையாற்றினர். அதனைத் தொடர்ந்து திறந்த கலந்துரையாடலும் இடம்பெற்றது.

மாணவர்கள், புத்திஜீவிகள் பரவலாக பல்வேறு கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். அதனைத் தொடர்ந்து வடக்கு – கிழக்கு இணைப்புக்கு ஆதரவாகப் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. வடக்கு – கிழக்கு இணைப்பு குறித்தான உரையாடல்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் தொடரவேண்டும் என்பதே நிகழ்வில் பங்கேற்ற பலரதும் விருப்பமாக இருந்தது.

**கலாநிதி கே.ரி. கணேசலிங்கம் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,**

வடக்கு– கிழக்கு இணைப்பு தமிழர்கள் தங்களைத் தேசிய இனமாக அடையாளப்படுத்துவதற்கான அடிப்படை என்பதை நாம் மறத்தலாகாது. உலகத்தில் ஐரோப்பியர்கள் தேசிய எல்லைகளைக் கடந்து விட்டார்கள் எனப் பேசப்பட்டு வருகிறது. உலகமயமாதலின் பின்னர் உலகத்தின் அனைத்து எல்லைகளும் தகர்ந்து விட்டன என உரையாடுகிறார்கள். ஆனால், இது பொய்யானதொன்று.

அமெரிக்காவின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆட்சிக்கு வருகின்ற போது அமெரிக்கா அமெரிக்கனுக்கு வேண்டுமென்றார். இதனைத் தான் பிரித்தானியனும் கூறினான். ஐரோப்பிய யூனியனுடைய கட்டளைகளும், விருப்புக்களும் எங்களுக்கு வேண்டாம். நாங்கள் பிரித்தானியர்களாகவே இருக்க விரும்புகின்றோம் என்பது அவர்கள் நிலைப்பாடு.

குர்திஸ் இன மக்கள் 20 நூற்றாண்டுகளுக்கு மேல் போராடிய நிலையில் தற்போது பொதுவான வாக்கெடுப்பிற்கு வந்து ஈராக்கில் புதிய அரசை அமைப்பதற்கான அணுகுமுறைக்கு வரலாம் என்றால் வடக்கு – கிழக்கிலுள்ள தமிழ்மக்கள் ஏன் வடக்கு – கிழக்கு இணைப்புக் குறித்து ஒரு முடிவுக்கு வர முடியாது? எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

**வடக்கு – கிழக்கு இணைப்புத் தொடர்பாக யாழ். பல்கலைக்கழகச் சட்டத்துறைத் தலைவர் கலாநிதி– குமாரவடிவேல் குருபரன் கருத்துத் தெரிவிக்கையில்,**

வடக்கு மாகாண மக்கள் வடக்கு– கிழக்கு இணைப்பை சாதாரண உணர்வு ரீதியான சிந்தனையில் அணுகுகிறார்கள். ஆனால், கிழக்கு மாகாண மக்கள் தாங்கள் கிழக்கு மாகாணத்தில் நிலைத்து வாழக் கூடிய அடிப்படை குறித்தே சிந்திக்கிறார்கள்.

நிலத் தொடர்புள்ள சுயாட்சி அலகுள்ள ஒரு பகுதியாக காணப்படக் கூடாது என்பதற்காகவே வடக்கு கிழக்கு இணைப்புக்கெதிராகப் பலரும் கருத்து வெளி யிட்டு வருகிறார்கள். ஒரு மக்கள் கூட்டம் தங்களுக்குரிய நிலப்பரப்பிலே தாங்களே தங்களுக்கான உரிமைகளைத் தீர்மானிக்கும் வகையில் ஒரு நிலப்பரப்பை அடையாளப் படுத்துகிறார்கள். அந்த வகையில் தான் வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு அமைந்துள்ளது.

நிலத் தொடர்புள்ள வடக்கு– கிழக்கு கிடைக்கக் கூடாது என்பதற்காக அரசாங்கம் செயற்பட்டு வருகிறது. இவ்வாறு அரசாங்கம் செயற்படுவது ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது.

வடக்கு– கிழக்கில் வாழும் மக்கள் பன்மைத் தன்மை கொண்டவர்கள். அவர்கள் சேர்ந்து வாழ முதலில் பழகிக் கொள்ள வாய்ப்பை வழங்குங்கள். வாங்க பழகிப் பார்க்கலாம். அதன் பின்னர் வடக்கு– கிழக்கு இணைப்பைப் பற்றி அரசாங்கம் இறுதி முடிவெடுக்க வேண்டும்.

தமிழ்மக்கள் மத்தியில் முஸ்லீம் மக்களுக் கெதிரான மனநிலை அதிகரித்து வருகிறது. எதிர்கால வடக்கு கிழக்கில் தங்களது உரிமைகள் பாதுகாக்கப்படும், தங்களுக்கான சுயாட்சி ஏற்பாடுகள் காணப்படும் போன்ற விடயங்களை நாங்கள் முஸ்லீம் மக்களுக்குத் தெளிவு படுத்த வேண்டும். சமூகமாக உங்களுடைய கூட்டு எதிர் காலம் இணைந்த வடக்கு– கிழக்கில் நிலைத்திருக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறான சூழலில் தான் வடக்கு– கிழக்கு இணைப்புச் சாத்தியப்படும்.

வடக்கு– கிழக்கு இணைப்பு என்பது ஒரு மக்கள் கூட்டம் தங்களுடைய ஆட்புலத்தை அடையாளப்படுத்து வது ஆகும். அந்த ஆட்புலத்தை அடையாளப்படுத்து வதற்கான காரணம் வரலாறு மாத்திரமல்ல. அது எங்களு டைய அரசியல் ரீதியான எதிர்காலத்திலும் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணியாகவுள்ளது என்றார்.

**சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சிவசுப்பிரமணியம் ரகுராம் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,**

எங்களுடைய அரசியல் கட்டுமானமே வடக்கு, கிழக்கு இணைப்பிலேயே தங்கியுள்ளது. தமிழர் தாயகக் கோட்பாட்டின் அடிப்படையில் வடக்கு– கிழக்கு இணைப்பில் நாங்கள் உறுதியாகவிருக்க வேண்டும்.

வடக்கு– கிழக்கு இணைப்பு என்பது தமிழ் மக்களின் பல்வேறு விடயங்களை உறுதிப்படுத்தக் கூடியதொரு முக்கியமான விடயம். வடக்கு– கிழக்கு பிரிந்திருக்க வேண்டும் என்று சிந்திப்பது எங்களுடைய எதிர்காலத்திற்குப் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்றார்.

குறித்த கலந்துரையாடலில் யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ. விக்கினேஸ்வரன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், தமிழரசுக் கட்சியின் தென்மராட்சிப் பிரதேச அமைப் பாளரும், ஓய்வு நிலை அதிபருமான க. அருந்தவபாலன், பேராசிரியர் சி. க. சிற்றம்பலம், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் உட்பட மாணவ, மாணவிகள், விரிவுரையாளர்கள், ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

“ ஒரு மக்கள் கூட்டம் தங்களுக்குரிய நிலப் பரப்பிலே தாங்களே தங்களுக்கான உரிமைகளைத் தீர்மானிக்கும் வகையில் ஒரு நிலப்பரப்பை அடையாளப் படுத்துகிறார்கள். அந்த வகையில் தான் வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு அமைந்துள்ளது ”

லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.Nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

## ஆசிரியர் பார்வை

# இலங்கையில் காணாமல் ஆக்கப்படும் நீதி!

போர் முடிந்து 8 ஆண்டுகள் கடந்த பின்பும் உண்மையை கண்டறிதல், நீதி, இழப்பீடு மற்றும் மீள நிகழாமையை உறுதிப்படுத்தும் விடயங்களில் இலங்கை அரசு எவ்வித முன்னேற்றங்களையும் காணவில்லை என்பது இங்கே நிதர்சனமாகத் தெரியும் உண்மையாகும்.

தினமும் கண்ணீரும் கம்பலையுமாக தங்கள் உறவுகளைத் தேடிவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், தொடர்ந்தும் எவ்வித விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள், தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த காணிகளில் குடியிருக்கும் இராணுவம் என தமிழ் மக்களின் வாழ்வு நித்தமும் போராட்டத்துடன் தான் கழிந்து வருகிறது.

அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான போராட்டம் பல்வேறு தரப்புக்களாலும் பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அரசாங்கம் செவி சாய்ப்பதாக தெரியவில்லை.

அரசியல்கைதிகளை விடுதலை செய்தால் தென்னிலங்கையில் பேய்கள் ஆட்சிக்கு வந்துவிடும் என யாழில் வைத்தே மிரட்டுகிறார் நல்லாட்சி அரசின் நாயகர் மைத்திரிபால சிறிசேன. நாட்டை வழிநடாத்துவது மகாசங்கங்களா அரசாங்கமா எனும் அளவுக்கு குழம்ப வேண்டியுள்ளது.

இவ்வாறிருக்கையில், முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையில் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக பிரேசிலில் தொடரப்பட்டுள்ள வழக்கு, மிகப் பெரிய பிரச்சினையாக உருவெடுக்கக் கூடும் என்று ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப் எச்சரித்துள்ளமை இங்கே முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

உண்மையை கண்டறிதல், நீதி, இழப்பீடு, மற்றும் மீள நிகழாமையை உத்தரவாதப்படுத்தலுக்கான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரெய்ப் இலங்கையில் 14 நாட்கள் தங்கி நின்று பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடி இறுதியில் கொழும்பில் வைத்து இக்கருத்தை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிலைமாறுகால நீதி செயற்பாடுகள் அரசியல்மயப்படுத்தப்பட்டிருப்பது ஏமாற்றம் அளிக்கிறது என்பதையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

விரிவான நிலைமாறுகால நீதி திட்டத்தை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் தாமதம், பல்வேறு மட்டங்களிலும் கேள்விகளை எழுப்பியுள்ளது.

கடந்த 2015 மார்ச் முதல் இதனுடன் சேர்த்து இலங்கைக்கு நான்கு விஜயங்களை மேற்கொண்டிருக்கிறார் பப்லோ டி கிரெய்ப். ஐநாவின் மனித உரிமைப் பேரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் நோக்கிலேயே இவ் விஜயத்தை அவர் மேற்கொண்டுள்ளார்.

இலங்கையில் ஐ.நா எவ்வளவு தலையீடுகளை செய்தாலும் தமிழர்களுக்கு நீதி என்பது இழுபட்டுச் சென்று காணாமல் ஆக்கப்படும் ஒன்றாகத்தான் இருக்கிறது. இலங்கையில் நீதியே காணாமல் ஆக்கப்பட்ட ஒன்று தான். இதனைக் காலம் காலமாக சிங்கள இனவாதிகள் சச்சிதமாக செய்து வந்திருக்கின்றனர். இதனை உணர்ந்து ஐ.நா தனது நடவடிக்கைகளில் இறுக்கத்தைக் கொண்டு வர வேண்டும். இல்லையெனில் ஐ.நா மீது தமிழ் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் இழக்க நேரிடும்.

- செ. கிரிசாந் -






# ஒவ்வொரு பிடிமண்ணும் ஒவ்வொரு துளி நீரும் நம் உயிர் ஆதாரம்

வைத்தியகலாநிதி – ந.பிரபு
யாழ் இந்துப் பழைய மாணவர்
(2006 உயிரியற்துறை)
இணை நிறுவுனர், சுவடி நிறுவகம்.

மூன்று தசாப்தகால யுத்தம் எதிர்பாராத விதத்தில் முடிவுக்கு வந்து எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இக் காலப்பகுதியில் போரில் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர் களிற்கான உடனடி உதவிகள், ஊனமுற்றோர், பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் மறுவாழ்வு முதற் கொண்டு பண்பாட்டு மீளெழுச்சி, சமய, சமூக நிறுவனங் களின் மீள்நிர்மாணம் வரை பல்வேறு செயற்பாடு களை புலம்பெயர்ந்தோர் மேற்கொண்டு வருகின்றனர். இவற்றைவிட இலங்கைத்தீவில் வாழும் தமிழரின் பொருளாதாரத்தினைத் தீர்மானிக்கும் ஆதாரசக்தியாக புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்களே விளங்குகின்றனர். இதனால் வடக்குக் கிழக்கில் எஞ்சியுள்ள மக்களில் பலர் குறிப்பாக இளைஞர்கள் வெளிநாட்டுக்குப் புலம் பெயர்தலில் அதீத ஆர்வம் கொண்டுள்ளனர். போர் முடிவுக்கு வந்து எட்டாண்டுகளின் பின்னரும் காணப்படும் இந்நிலைக்குக் காரணங்கள் பல இருக்கின்றன. இருப் பினும், புலம்பெயர்தல் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்பதில் அனைவரும் ஒத்த கருத்துக்கு வரவேண்டிய கட்டத்தில் உள்ளோம்.

தீவகமக்களின் உள்ளக மற்றும் வெளிநாடு களிற்கான புலம்பெயர்தலுக்கான ஏதுநிலைகளை ஆராய்ந்தால் பல்வேறு உண்மைகள் வெளிவரக்கூடும். கடந்த பத்தாண்டுகளில் தீவகப் பிரதேசங்கள் பல விதங்களில் அபிவிருத்தியைச் சந்தித்திருக்கின்றன. பாடசாலைகளிற்குப் பற்பல கட்டடங்கள் நிறுவப் பட்டுள்ளன. உள்ளக வசதிகள் பெரிதும் மேம்பட்டிருக் கின்றன. சனசமூக நிலையங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன. அங்கு வாசிப்புக்கான வசதிகள் முதற்கொண்டு படிப்பகங்கள் வரை உருவாக்கப் பட்டுள்ளன. இந்து கிறீஸ்தவ ஆலயங்கள் மீளமைக் கப்பட்டிருக்கின்றன. இருந்தும் தீவகத்தினை விட்டு வெளியேறிச் செல்லும் மக்கள் தொகை அதிகரித்தே வருகின்றது. காரணம் என்ன? இக்கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் போது தீவகம் முதற்கொண்டு வடக்குக் கிழக்கின் சகல பகுதிகளும் கடுமையான வறட்சிக்கு உட்பட்டுள்ளன. தீவகத்தில் குடிநீர் பவுஸர்கள் மூலம் வழங்கப்படுகின்றன என்பது உண்மைதான். எனினும் இது ஒரு முழுமையான தீர்வு அல்ல. கிணறுகளில் ஒரு சொட்டு நீர் தன்னும் இல்லாதிருப்பதால் சகல தேவைகளுக்குமான நீரை பவுஸர்களில் வழங்கிவிட முடியாது. முறையான பாதைகள் அற்ற மீனவக் கிராமங்களிற்கு இந்த வசதி கூடக்கிடைக்காது. அவர்கள் தினமும் 25லீட்டர் கொள் கலன்களில் நீரைச் சுமந்து செல்வதை எங்கும் காணலாம்.

அபிவிருத்தி பற்றி சகலதையும் ஆராய்ந்த நாம் அடிப்படை விடயங்களில் தவறிழைத்துவிட்டோம் என்பதையே இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இத் தவறுக்குக் காரணமானவர்கள் என்று யாரையும் குற்றம் சொல்ல நான் விழையவில்லை. நாம் அனைவரும், நாங்கள் சுட்டும் விரல்களை எங்களை நோக்கி திருப்பி சுயவிசாரணை செய்ய வேண்டும். செய்தாலன்றி இச்சூழல் மாறாது. நீர்வள முகாமைத்துவம் தொடர்பான நிலை யான கொள்கைகளை உருவாக்க நாம் அனைவரும் அழுத்தம் பிரயோகிக்க வேண்டும். புலம்பெயர் மக்கள், கல்விச் சமூகத்தினர், அரசியல்வாதிகள் அனைவரும் வெளிப்படையான கருத்துப்பகிர்வு மற்றும் நிபுணத்துவ ஆலோசனைகள் மூலம் கொள்கையுருவாக்கத்தில் பங்கெடுக்க வேண்டும்.

நீர் மேலாண்மை மட்டுமன்றி நிலவளப் பயன்பாடு, நிரந்தரத் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தல், சூழலுக் கிசைவான நிலைத்து நீடிக்கும் அபிவிருத்திப் பணி களை முன்னெடுத்தல் போன்ற பலவிடயங்களில் நாம் அக் கறையின்றி இருந்து வருகிறோம். இனியாகினும் எமக் கென ஒரு பொருண்மியத் தொலைநோக்கினை உரு வாக்கிச் செயற்படுத்த வேண்டும். இல்லையேல் எம் மக்கள் ஒரு நீண்ட வெற்றிடத்தில் மீளவொண்ணா வறுமையில் வீழ நேரிடும். இருபத்தோராம் நூற்றாண்டுக்கு ஏற்றதும் பசுமைத் தொழில்நுட்பங்களிற்கு முன்னுரிமை தருவதுமான தொழிற்துறைகளிற்கு நாம் முக்கியத் துவம் கொடுக்க வேண்டும். காக்கைவெளிக் கடற்கரைச் சாலையூடு ஒரு முறை பயணிப்பீர்களானால் பிளாஸ்ரிக் பொலித்தீன் பாவனை எவ்வளவு ஆபத்தானதொன்றாக மாறியுள்ளது என்பதை உணர்வீர்கள். பிளாஸ்ரிக் பொலித் தீனுக்கான பதிலீட்டுப் பொருள் உற்பத்தியை ஊக்கு விக்க வேண்டும். பாரம்பரியமான தும்பு, பனை யோலை, வாழைநார் உற்பத்திகளில் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தல் வேண்டும். புங்குடுதீவில் அமைந்துள்ள வட இலங்கைச் சர்வோதயம், நீர்வேலி வாழைக்குலைச் சங்கம் போன்றவை பதிலீட்டுப் பொருள் உற்பத்திக்கு முக்கியத்துவம் தருகின்றன.

உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகள் பல தமது வளங்களைச் சரியான திட்டமிடலுடன் அணுகியதன் காரணமாகவே அபிவிருத்தியை அடைய முடிந்திருக்கிறது. பெரிதும் பயன்படுத்தப்படாமல் பயனற்றுப் போயிருக்கும் எம் அரிய வளம் கடல்வளமே. பாரம்பரிய மீன்பிடியைத் தவிர்த்து நாம் வேறு எதனையும் பற்றிச் சிந்திப்பதில்லை. ஆழங்குறைந்த கண்டமேடைப் பகுதிகளைப் பயன்படுத்தி பற்பல பணம் கொழிக்கும் தொழில்களை உருவாக்க முடியும். உதாரணமாக உவர்நீர் இறால் வளர்ப்பு, நண்டு வளர்ப்பு, கடற்பாசி வளர்ப்பு போன்றவற்றினைக் குறிப்பிடலாம். இப்புதிய தொழில் வாய்ப்புகள் பற்றி மக்களுக்கு அறிவூட்டவும் பயிற்சிகள் வழங்கவும் எம்மிடம் நிறுவனங்கள் எதுவும் இல்லை. கண்டல் காடுகளின் தாயகமாக இருக்கும் வடக்கும் கிழக்கும் அதன் பொருளாதார மகிமையை உணர்ந்ததுமில்லை. அதனைக் காப்பதற்கான சூழலியற் செயற்பாடுகளில் எவ்வித முன்னெடுப்புக்களையும் மேற்கொண்டது மில்லை. நம் வளங்களை நம்மவர் புறக்கணித் தொதுக்க அதனைச் சுற்றி வட்டமிடுகின்றன மேலைநாட்டு நிறுவனக் கழுகுகள் என்பதே இன்றைய நிலை. ஆழம் குறைந்த கண்டமேடைகள் மட்டும் அல்ல, பரந்து விரிந்திருக்கும் இந்துமா பெருங்கடலும் ஓர் அட்சய பாத்திரமே. அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரம் அருகிருந்தும் நம்மவர்கள் ஆழ்கடல் மீன்பிடி தொடர்பில் கிஞ்சித்தும் அக்கறை காட்டுவதில்லை.

# “இனியாகினும் எமக் கென ஒரு பொருண்மியத் தொலைநோக்கினை உருவாக்கிச் செயற்படுத்த வேண்டும். இல்லையேல் எம் மக்கள் ஒரு நீண்ட வெற்றிடத்தில் மீளவொண்ணா வறுமையில் வீழ நேரிடும்”

கடல் வளத்தினையும். நன்னீர் வளத்தினையும் சரிவரப் பயன்படுத்தத் தவறிய நாம் நிலவளத்தினை நாசம் செய்யும் இரசாயன உரங்களையும் பீடைகொல்லிகளையும் அள வுக்கதிகமாக பயன்படுத்தப் பின்னின்றதில்லை. திட்டமி டலற்ற விவசாய இரசாயனப் பயன்பாடு நம் பாரம்பரிய விவசாய நிலங்களை மலடாக்கியுள்ளதோடு புற்று நோய்த் தாக்கத்தினையும் சிறுநீரகச் செயலிழப்பையும் எம் மக்களின் தீராச் சுமையாக்கியுள்ளது. காலம் பிந்தி யேனும் நம்மவர்கள் இயற்கை வேளாண்மையில் ஆர்வம் கொண்டு செயற்பட்டு வருகின்றமை மகிழ்ச்சியளிக் கும் மாற்றமாகும். தெல்லிப்பழையில் அண்மையில் விடுவிக்கப்பட்ட விவசாய நிலங்களில் சேதனப் பயிர் செய்கையை அறிமுகம் செய்யப் பலரும் ஆர்வம் காட்டி வருகின்றனர். இரசாயனங்களால் மலடாக்கப்பட்ட நிலங் களை மீட்டெடுத்து அதில் இயற்கைப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளையும் திட்டமிடல் உதவிகளையும் சுவடி நிறுவகம் போன்ற சமூக முயற்சியாண்மை நிறுவனங் களும் தனிப்பட்ட துறைசார் நிபுணர்களும் வழங்கி வருகின்றனர். அசோலா–தாரா–நெற்பயிர் மூன்றையும் ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்படும் சேதன முறை யிலான நெற்செய்கை தென்னாசிய நாடுகளில் பெரிதும் பிரபல்யமானது. இது வடக்கில் பரீட்சார்த்த ரீதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மண்ணில்லா விவசாயம், நீரூடக வளர்ப்பு முறைகள் போன்ற நவீன தொழில்நுட்பங்கள் எமது பிரதேசங்களில் முறையாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும். தற்போது உவர்நீராகி யுள்ள நிலங்கள் பயன்பாட்டிலிருந்து விலக்கப்படாத

**(27 ஆம் பக்கம் பார்க்கவும்)**

# வேண்டும் விடுதலை




## தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக கிளர்ந்தெழும் தமிழ் சமூகம்

– செல்வநாயகம் ரவிசாந் –

தங்களது வழக்குகளை வவுனியா மேல் நீதி மன்றத்திலிருந்து அனுராதபுரம் விசேட நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டாம், தங்களது வழக்குகளை மீளவும் வவுனியா மேல் நீதிமன்றிற்கோ அல்லது யாழ்ப்பாண நீதி மன்றிற்கோ மாற்றியமைக்குமாறு கோரி அனுராதபுரம் சிறைச்சாலையில் மூன்று தமிழ் அரசியல் கைதிகள் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாகத் தொடர்ச்சியாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மூன்று அரசியல் கைதிகளதும் கோரிக்கைகள் இதுவரை நிறை வேற்றப்படவில்லை. இந்நிலையில் அரசியல் கைதிகள் மூவரதும் உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளது. மூன்றாவது தடவையாக மூன்று அரசியல் கைதிகளும் அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உண்ணாவிரதமிருந்து வரும் அரசியல் கைதி களுக்குஆதரவாகவும்,அரசியல்கைதிகளின்விடுதலையை வலியுறுத்தியும் வடக்கு மாகாணத்தில் பல்வேறு கவன யீர்ப்புப் போராட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. இந்நிலையில் வடக்கு மாகாணத்தின் முக்கிய மாவட்டமான யாழ். குடாநாட்டில் அரசியல் கைதிகளுக்கு ஆதரவான போராட்டங்கள் முனைப்புப் பெற்றுள்ளன.

**யாழ், கிழக்கு பல்கலைக்கழக சமூகங்கள் பூரண ஆதரவு**

யாழ். பல்கலைக்கழக சமூகம், கிழக்கு பல்கலைக் கழக சமூகங்கள் உண்ணாவிரதமிருந்து வரும் மூன்று அரசியல் கைதிகளுக்கும் தமது பூரண ஆதரவைத் தெரிவித்து வருகின்றன. குறித்த அரசியல் கைதிகளுக்கு ஆதரவாகவும், சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத் தியும் பல்கலைக்கழக சமூகங்கள் தொடர்ச்சியான போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றன.

இதற்கமைவாக யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள், பல்கலைக்கழக ஊழியர் சங்கம், ஆசிரியர் சங்கம் என்பன இணைந்து இம்மாதம் 4 ஆம் திகதி மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத் திருந்தன. இதன் மூலம் அரசியல் கைதிகளுக்கு ஆதரவான போராட்டத்தை யாழ். பல்கலைக்கழக சமூகம் ஆரம்பித்து வைத்தது.

சிறைச்சாலைகளில் பல வருடங்களாக எந்தவித விசாரணையுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் உடன் விடுதலை செய்யப்படல் வேண்டும், உண்ணாவிரதமிருக்கும் அரசியல் கைதிகளின் நியாயபூர்வமான கோரிக்கைகள் செவிசாய்த்து உடன் தீர்வு காணப்படல் வேண்டும், சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் அவல நிலை உணர்ந்து பொறுப்புக் கூற வேண்டிய தமிழ் அரசியல் தலைமைகள் அசமந்தப் போக்கினைக் கைவிட்டு உரிய தரப்பிடம் அழுத்தங்களைப் பிரயோகித்து கைதிகளின் விடயத்தில் பொறுப்புக் கூறல் வேண்டும் ஆகிய மூன்று முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தியே இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

அன்றைய தினம் பல்கலைக்கழக முன்றலில் ஒன்றுகூடிய பல்கலைக்கழகத்தின் அனைத்துப்பீட மாணவ ஒன்றியங்களையும் சேர்ந்த மாணவ, மாணவிகள், விரிவு ரையாளர்கள், ஊழியர்கள் உள்ளிட்டோர் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக "அரசியல் கைதிகளின் வழக்கு களை வேறிடங்களுக்கு மாற்றாதே!", "சிங்கள அரசியல் கைதிகளுக்கு ஒரு நீதி! தமிழ் அரசியல் கைதிகளுக்கு வேறொரு நீதியா?", "இது தான் உங்கள் நல்லாட் சியா!", "கைதுகளுக்குப் பொறுப்புக் கூறுவது யார்?", "தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்" உள்ளிட்ட மும்மொழிகளிலும் எழுதப்பட்ட பல்வேறு சுலோகங்களைக் கைகளில் தாங்கியிருந்ததுடன் பல கோஷங்களையும் எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் அரசியற் கைதியாக விருந்து ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ள எஸ்.கோமகன், அரசியற் கைதிகளின் உறவினர்கள் ஆகியோரும் பங்கெடுத்திருந்தனர்.

உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைகளை அரசாங்கம் உரிய முறையில் செவிமடுத்து தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும், அரசியல் கைதிகளின் விடுதலையையும் துரிதப்படுத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளை யாழ்.பல்கலைக்கழக சமூகம் சார்பாக முன் வைக்கிறோம். எமது கோரிக்கைகளை அரசாங்கம் மற்றும் பொறுப்பு வாய்ந்தவர்கள் நிராகரிக்கும் பட்சத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் போராட்ட வடிவத்தினை மாற்ற வேண்டிவரும் என கவனயீர்ப்புப் போராட்டத்தின் நிறைவாக உரையாற்றிய பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் வி.அனுராஜ் கருத்துத் தெரிவித்திருந்தார்.

யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தைக் கடந்த செவ்வாய்க்கிழமை(17) முற்பகல் ஆரம்பித்தனர். யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஆரம்பமான குறித்த போராட்டம் அரசியற் கைதிகள் விவகாரம் தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதை யடுத்து அன்றைய தினம் பிற்பகல் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் மாணவ ஆலோசகர்கள் இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியை நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடும் போது உரிய அழுத்தங்களை வழங்குவதாகத் தெரிவித்ததையடுத்தே குறித்த போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து 19 ஆம் திகதி ஜனாதிபதியுடனான சந்திப்பும் திருப்தியளிக்கவில்லை எனவும் தமிழ் அரசியல் கைதிகளுக்காக வகுப்பு புறக்கணிப்பு தீர்மானத்தினை கொண்டு வருவதாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் 20 ஆம் திகதி அறிவித்துள்ளது. இதேவேளை ஒரு மாதத்திற்கு மேலாக தொடர்ச்சியாக உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வரும் அரசியல் கைதிகளின் உடல்நிலை முற்றிலும் சோர்வடைந்த நிலையில் ஆபத்தான கட்டத்தை அடைந்து அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதேவேளை கிழக்குப் பல்கலை மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வளாக முன்றலில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டு அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக குரல் எழுப்பினர்.

## ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைக் கடிதம்

ஐப்பசி மாதம்–07 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். நல்லூரில் 18 அரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் அரசியல் கைதிகள் தொடர்பாக ஒன்று கூடிக் கலந்துரையாடின. இந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உடனடியாகக் கிடைக்கும் வகையிலான கோரிக்கைக் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டது.

அந்தக் கடிதத்தில் அனுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் அரசியல் கைதிகளின் கோரிக்கைகள் நியாயமானவை என்பதனால் அவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளுமாறும், அனைத்து அரசியல்கைதிகள் தொடர்பாகவும் அரசியல் தீர்மானமெடுத்து நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பான கோரிக்கைக் கடிதங்கள் சட்டமா அதிபர் திணைக்களம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நீதி அமைச்சு ஆகியவற்றிற்கும் அனுப்பி வைக்கப்பட்டன. ஆனாலும், இதுவரை குறித்த கோரிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட தரப்பிடமிருந்து நியாயமான பதிலெதுவும் வழங்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## யாழ். நகரில் முன்னெடுக்கப்பட்ட மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ள தமிழ் அரசியல்கைதிகளுக்கு ஆதரவாகவும், அரசியல் கைதிகள் அனைவரது விடுதலையை வலியுறுத்தியும் மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று கடந்த–09 ஆம் திகதி முற்பகல் யாழ். நகரில் நடைபெற்றது. அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு உட்பட அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்த மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

மேற்படி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு சுலோகங்களைத் தாங்கியிருந்ததுடன் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திக் கோஷங்கள் பலவற்றையும் எழுப்பினர். இதன் போது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அசமந்தப் போக்குடன் செயற்பட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கெதிராகவும், இலங்கை அரசாங்கத்திற்கெதிராகவும் பல்வேறு கோஷங்கள் ஆக்ரோஷமான முறையில் எழுப்பப்பட்டன.

இதன் போது உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாகப் பொதுமக்களின் பெருவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது. கவனயீர்ப்புப் போராட்டமும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வீதி மறியல் போராட்டமும் முற்பகல்–11.30 மணியுடன் நிறைவுக்கு வந்தது.

போராட்டத்தின் நிறைவில் இன்று யாழ்ப்பாணத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளும், பொதுமக்களும்

முன்னெடுத்த அடையாளக் கவனயீர்ப்புப் போராட்டம் எதிர்வரும் நாட்களிலும் தொடர வேண்டுமா என்பது குறித்து உடனடியாக அரசாங்கம் ஒரு முடிவுக்கு வர வேண்டும். இல்லாவிடில் போராட்ட வடிவங்களை மாற்ற வேண்டிய நிலைக்குத் தமிழ்மக்கள் தள்ளப்படுவார்கள். அந்த நிலையை நல்லாட்சி அரசாங்கம் உருவாக்கக் கூடாது எனவும் வலியுறுத்தப்பட்டது.

இந்தக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் அமைப்பாளர் **அருட்தந்தை சக்தி வேல் கருத்துத் தெரிவிக்கையில்,** உண்ணாவிரதமிருந்து வரும் தமிழ் அரசியல் கைதிகள் மூவர் உடல் நிலை மோசமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக் காக சேர்க்கப்பட்டுள்ளதாக எங்களுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. இந்த வேதனை எங்களால் எளிதில் தாங்க முடியாததொன்று. உண்ணாவிரதம் மேற்கொண் டுள்ள அரசியல் கைதிகள் மூவருடையதும் கோரிக்கை கள் நியாயமானவை. இந்த நாட்டு மக்கள் அனை வருக்கும் சமத்துவமான நீதி வழங்கப்பட்டுள்ளது என்றால் உண்ணாவிரதமிருந்து வரும் அரசியற் கைதி களுடைய கோரிக்கைகளை அரசாங்கம் உடனடியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன் அரசியல் கைதி கள் தொடர்பாக உறுதியான தீர்மானம் மேற்கொண்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதி களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்தும், தடுத்து வைக்கப் பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தியும் அரசாங்கத்திற்கும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிற்கும் அழுத்தம் கொடுக்கும் வகையிலேயே யாழ்ப்பாணத்தில் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் இணைந்து கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

**இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த அனைவரும் உண்ணாவிரதப் போராட்டம் மேற் கொண்டுள்ள அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக சிவப்பு மையினால் தமது பெருவிரல் அடையாளத்தைப் பதிவு செய்துள்ளனர். எதிர்வரும் நாட்களில் இந்த அடை யாளத்தை நாங்கள் இரத்தத்தினால் வைப்பதா இல்லையா என்பதை அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும். நாங்கள் முன்னெடுத்துள்ள போராட்டம் யாருக்கும் எதிரான போராட்டமல்ல. தமிழ்மக்களுடைய எதிர்காலத்திற் காகவும், அவர்களின் அரசியலைப் பாதுகாப்பதற் காகவுமே வீதியில் இறங்கிப் போராடுகின்றோம் என்றார்.**

அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக கடந்த 13 ஆம் திகதி வடமாகாணம் தழுவிய ரீதியில் பூரண ஹர்த்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் ஹர்த்தாலுக்கு யாழ். பல்கலைக்கழக சமூகமும் பூரண ஆதரவு வழங்கியிருந்தது.

## “இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் சமத்துவமான நீதி வழங்கப்பட்டுள்ளது என்றால் உண்ணாவிரத மிருந்து வரும் அரசியற் கைதிகளுடைய கோரிக்கை களை அரசாங்கம் உடனடியாக ஏற்றுக் கொள்ள வேண்டும்”

20 வரையான தமிழ்க் கட்சிகளும், சிவில் அமை-ப்புக்களும் இணைந்து பூரண ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுத்திருந்தன. இதற்கமைவாக குறித்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

### வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாகவும் வீதி மறியல் போராட்டம்

இதேவேளை கடந்த–13 ஆம் திகதி யாழ்ப்பாணத்தி லுள்ள வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்திற்கு முன்பாக ஒன்று திரண்ட பொதுமக்கள் ஏ–09 பிரதான வீதியை மறித்து வீதி மறியல் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு, அரசியல் கைதிகளின் உறவினர்கள், பொது அமைப்புக்கள் இணைந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்தன. இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டி ருந்தவர்கள் அரசியல் கைதிகளின் கோரிக்கையை உடனடி யாக நிறைவேற்ற வேண்டுமெனவும், அரசியல் கைதி களை விடுதலை செய்ய வேண்டுமெனவும் வலியுறுத்திப் பல்வேறு கோஷங்கள் எழுப்பினர்.

### ஜனாதிபதியின் யாழ். வருகைக்கு கடும் எதிர்ப்பு: கறுப்புக் கொடி காட்டி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

வடமாகாணத்தில் முதல் தடவையாகத் தேசிய தமிழ்த் தின விழா மற்றும் பாடசாலைகளின் கலாசார விழா யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்றது. இந்த விழாவில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்த நிலையிலேயே ஜனாதிபதியின் வருகைக்கு எதிராக விழா இடம்பெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அண்மித்த கே.கே.எஸ். பிரதான வீதியில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ் சிவில் அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் இணைந்து ஏற்பாடு செய்த குறித்த

ஆர்ப்பாட்டத்தின்போது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை நோக்கிப் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் பயணித்துக் கொண்டிருந்த ஜனாதிபதி தனது வாகனத்திலிருந்து கீழே இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களை சந்தித்துள்ளார்.

இதன் போது ஜனாதிபதிக்கெதிராகவும், அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் உரத்துக் கோஷம் எழுப்பியுள்ளனர். அத்துடன் ஜனாதிபதியின் வருகைக்கெதிராகக் கறுப்புக் கொடிகளும் காட்டியுள்ளனர்.

"ஜனாதிபதி மைத்திரிபால வாகனத்தில் இருந்து இறங்கி வந்து போராட்டக்காரர்களை சந்தித்தார் என்று சொல்வதெல்லாம் சுத்தப் பம்மாத்து. எந்தவொரு அரச தலைவரும் தனது பாதுகாப்பு தொடர்பில் அப்படி அக்கறை யற்று இருக்க அவரே நினைத்தாலும் முடியாது. ஆகவே இந்த மாதிரியான 'photo opportunity' தருணங்கள் எல்லாம் முற்கூட்டியே திட்டமிட்டு அரங்கேற்றப்படு கின்றன என்பதனை அறிக. தமிழ் மக்களுக்கும் சரி சர்வ தேசத்திற்கும் சரி 'engage' பண்ணுகிறேன் (பேசுகிறேன், கேட்கிறேன்) என்று காட்டினால் போதும் என மைத்திரி நம்புகிறார். சர்வதேசத்திற்கு போதும் தான். முகப்புத்தக பதிவுகளைப் பார்த்தால் தமிழ் மக்களுக்கும் இந்த பெரிய மனசுக்காரன் இமேஜ் போதும் போல இருக்கு" என கருத்து வெளியிட்டிருந்தார் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் குமாரவடிவேல் குருபரன்.

"அரசியல் கைதிகள் தொடர்பாக இதுவரை ஆக்க பூர்வமான எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. இதன் காரணமாகவே நாம் உங்கள் வருகைக்கு எதிராகப் போராட்டம் நடாத்தினோம்." என சுரேஷ்பிரேமச்சந்திரன் ஜனாதிபதியிடம் கூறினார். அதன்போது தான் இது தொடர்பில் வெகு விரைவில் கலந்துரையாடல் நடாத்த வுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். தொடர்ச்சியாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றுங் கள். அதன் பின்னர் அரசியல் கைதிகள் தொடர்பில் கலந்துரையாடித் தீர்க்கமான முடிவுக்கு வருவோம் என சுரேஷ் பிரேமச்சந்திரன் பதிலளித்துள்ளார். இதனையடுத்துப் பதிலெதுவும் கூறாமல் ஜனாதிபதி அங்கிருந்து சென்றுள்ளார்.

ஜனாதிபதி அங்கிருந்து விழா மண்டபத்திற்குச் சென்ற பின்னரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்ச்சி யாக நடாத்தப்பட்டுள்ளது. "மைத்திரியே வெளியேறு', 'அரசியல் கைதிகளின் கோரிக்கையை நிறைவேற்று!', 'அரசியற் கைதிகளை விடுதலை செய்' உள்ளிட்ட பல்வேறு கோஷங்கள் எழுப்பியும், கறுப்புக் கொடிகள் காட்டியும் இதன் போது எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ்.இந்துக்கல்லூரி மண்டபத்தில் விழா நிகழ்வுகள் ஆரம்பமாகி இலங்கையின் தேசிய கீதம் பாடப்பட்ட போதும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி யின் வருகைக்கு எதிராகவும், அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் கோஷங்கள் எழுப்பினர். எனினும், அதனைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து ஒலித்த போது சுமார் ஐந்து நிமிடங்கள் வரை ஆர்ப்பா– ட்டக்காரர்கள் அமைதியாகினர். எனினும், தமிழ்த் தாய் வாழ்த்து ஒலித்து ஓய்ந்த பின்னர் மீண்டும் ஆர்ப் பாட்டக்காரர்கள் கடுமையாகக் கோஷமெழுப்பினர். இதனையடுத்து முற்பகல்– 11.15 மணியளவில் எதிர்ப்புப் போராட்டம் முடித்து வைக்கப்பட்டது.

நீதிமன்றத் தடையுத்தரவு மற்றும் பல்வேறு அழுத் தங்களையும் மீறி ஜனாதிபதிக்கெதிரான கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்டது.

ஜனாதிபதியுடனான சந்திப்பு திரும்பதியளிக்காத நிலையில் அவரது விருந்துபசாரத்தை தாம் புறக்கணித்த நிலையில் அன்று மாலை இடம்பெற்ற தீபாவளி இராப் போசனத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கலந்து கொண்டிருந்தமை அதிருப்தி யளிப்பதாக யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

மைத்திரி–ரணில் கூட்டரசாங்கத்துடன் மிகவும் நெருக்கமாகச் செயற்பட்டு வரும் கூட்டமைப்பின் தலைமை நினைத்திருந்தால் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்திற்கு எப்போதோ தீர்வு பெற்றுத் தந்திருக்க முடியும். தற்போது உண்ணாவிரதமிருந்து வரும் அரசியல் கைதிகளின் உடல்நிலை காரணமாகவும், மக்களின் போராட்ட எழுச்சி காரணமாகவும் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பாகக் கூட்டமைப்பின் தலைமைக்கு நெருக்கடி அதிகரித்துள்ளது. இதன் காரண மாக அரசாங்கத்துக்கு கடும் அழுத்தம் கொடுக்க வேண்டிய நிலைக்குக் கூட்டமைப்பின் தலைமை தள்ளப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் மூன்று அரசியல் கைதிகளுக்கும் ஆதரவாக வெறும் கருத்துக்கள் கூறுவதையும், அறிக்கைகள் வெளியிடுவதையும் விடுத்து உடனடியாகச் செயலில் இறங்கிய வேண்டிய தருணமிது. மாறாக உண்ணாவிரதமிருந்து வரும் அரசியல் கைதி களின் நியாயமான கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்காத நிலையில் அவர்களது உயிர்களுக்கு ஆபத்து ஏற்படும் பட்சத்தில் அதற்கான முழுப் பொறுப்பையும் கூட்டமைப்பின் தலைமையே ஏற்க வேண்டி வரும். இதனால், தமிழ்மக்களின் மாறாத கோபத்திற்கும், வெறுப்பிற்கும் கூட்டமைப்பின் தலைமை ஆளாக வேண்டி வரும்.

# இறுதியில் நிலைக்கப் போவது ஈழமொழி பேசும் தனித்துவ சினிமாக்கள் தான்






ஈழத்திரைகடலோடிகள்

துருவன்

உண்மையான ஈழத்துச் சினிமாவைப் படைக்க வேண்டும் என்கிற வெறியுடன் பயணிக்கும் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த இளம் படைப்பாளியே மதிசுதா. இவரது முன்னைய குறும்படங்கள் பலராலும் பேசப்பட்டவை. பல்வேறு விருதுகளையும் பெற்றவை. சினிமா முயற்சிகள் மட்டுமல்ல போர்க்காலத்தில் தன்னால் முடிந்த மருத்து வப் பணிகளையும் மக்களுக்காக செய்தவர். இவரின் அண்ணாவே ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு தொடர்ந்தும் சிறைக் கொட்டடியில் இருக்கும் சாந்தன் ஆவார். அண்ணாவை மீட்க போராடும் தம்பி யாக மட்டுமல்லாமல் தொடர்ந்தும் நமக்கான சினிமாவை படைக்க வேண்டும் என்கிற உன்னத நோக்கோடு தன்னையே அர்ப்பணித்து தளராது பயணித்து வருகிறார். தற்போது ‘உம்மாண்டி’ என்கிற முழுநீளத் திரைப்படத்தை வெளியிடும் மதி சுதாவுடன் ஒரு சிறு நேர்காணல்,

**உங்களைப்பற்றி சிறு அறிமுகம்?**

பெரிதாய் அறிமுகப்படுத்தும் அளவுக்கு இன்னும் சாதிக்கவில்லை. சுருக்கமாகச் சொன்னால் தென்னிந்திய சினிமா ரசிகர்கள், தென்னிந்திய சினிமாவை பிரதி செய்யும் திரைப்பட உருவாக்குனர்கள் ஆகியோருக்கு மத்தியில் எங்களுக்கென்றொரு சினிமா வேண்டும் என போராடும் ஒரு சில படைப்பாளிகளுக்கும் நானும் ஒருவன்.

**ஈழம் சினிமா முயற்சிகள் பரவலாக எந்த நிலையில் இப்போது உள்ளன?**

மேற்சொன்ன பதிலுக்குள் இருந்தே இக் கேள்விக் கான பதிலும் ஆரம்பிக்கிறது. ஈழ சினிமா இரு வேறு திசைகளில் மிக வேகமாகப் பயணிக்கிறது. ஒன்று ஈழத் துக்கான மொழி வாழ்வியல் கொண்ட தனித்துவ சினிமா இன்னொன்று மக்களுக்கு இது தான் பிடிக்கும் எனக் கூறிக் கொண்டு எடுக்கப்படும் தென்னிந்திய பிரதி சினிமா. ஆனால், இதிலும் இரண்டாவது சினிமா தான் மிக வேகமாக பயணிக்கிறது. காரணம் அவர்களிடம் தான் தாராளமான தயாரிப்பாளர்களும் பணமும் இருக்கிறது. அதே போல் தனித்துவ சினிமாக்களை குற்றம் குறை கூறி முடக்குவதற்கான ஆளணியும் அவர்களிடம் தான் உள்ளது. இத்தனையும் கடந்து இறுதியில் நிலைக்கப் போவது ஈழ மொழி பேசும் தனித்துவ சினிமாக்கள் தான் என்பதும் உறுதியாகும். ஏனென்றால் அச்சினிமாவில் இருந்து சிலர் இப்போது இதற்கு தாவி விட்டார்கள் சிலர் விலத்திப் போய் விட்டார்கள்.

**உங்களது படைப்பாக்க முயற்சிகள் குறித்து சொல்லுங்கள்?**

சினிமா என்பது பணங்களின் மேல் ஆடும் ஒரு வகை நடனம். ஆனால் நான் என்றைக்குமே பணத்தை ஒரு தடையாகப் பார்த்ததில்லை. அதே போல் தயாரிப் பாளர்களிடமும் இறைஞ்சி நின்றதில்லை. என் ஆரம்ப காலப்படங்களை மொபைல் போனில் தான் செய்தேன். மொபைல் போனில் செய்த படத்துக்கு ஒரு நாட்டின் தேசிய அளவிலான விருது கிடைத்தது என்பதும் நம்ப முடியாத ஒன்று தான். ஆனால் என்னிடம் இருக்கும் ஒரு வகை கிறுக்குத்தனமான மன ஓர்மம் அதையும் செய்து காட்டியது.

இப்போது செய்த முழு நீளத் திரைப்படமான உம்மாண்டிக்கும் வந்த தயாரிப்பாளர்களுடன் ஒத்திசைய முடியாமையால் நானே வங்கிக் கடன் ஒன்றின் மூலம் பணம் பெற்றுத் தான் எடுத்து முடித்திருக்கிறேன்.

**உம்மாண்டி எப்படி வந்திருக்கிறது? தயாரிக்கும் போது எதிர்கொண்ட சவால்கள்?**

என்னைப் பொறுத்தவரை நான் ஆசைப்பட்ட கதை ஒன்றை எந்தவொரு விட்டுக் கொடுப்புக் கூட இல்லாமல் அப்படியே வெளிக் கொணர்ந்திருப்பதில் முழு மனத்திருப் தியோடு இருக்கிறேன். இதே கதையை ஒரு தயாரிப் பாளரிடம் கொண்டு போயிருந்தேன். அதில் பல மாற்றங்கள் அவரால் சொல்லப்பட்டது. அந்த நேரம் தான் யோசித்தேன். இது என் படமா? இவர் படமா? இவருக்கு போட்ட பணத்தை இலாபத்தோடு எடுத்துக் கொடுத்தால் போதும் என்ற எண்ணம் மட்டுமே எனக்குள் இருந்தது. ஆனால் அவருக்கு அதை விட மேலாக ஒரு எண்ணம் இருந்தது.

அப்போது தயாரிப்பாளர்களிடம் ஒரு ஒப்பந்தம் கேட்டேன். இதில் நீங்கள் இடும் பணத்தில் எவ்வளவு நட்டம் வருகிறதோ அதை நான் பொறுக்கிறேன். ஆனால் வரும் இலாபத்தில் 50 வீதம் எனக்குத் தரப்பட வேண்டும் எனக் கேட்டேன். முதலாவது நிபந்தனைக்கு தயாராக வந்த சிலர் இரண்டாவது நிபந்தனைக்கு சம்மதிக்க மறுத்து விட்டார்கள். அப்போது தான் முடிவெடுத்தேன், என் முதலில் அவர் ஏன் பணக்காரன் ஆவான், நானே போட்டு எடுப்போம், நட்டப்பட்டால் பின்னர் பார்த்துக் கொள்வோம் என. ஆனால் ஆரம்பத்தில் வங்கிக் கடனும் கிடைக்க வில்லை கையில் சேரும் பணத்தை வைத்துத் தான் படப்பிடிப்பை நகர்த்தினேன். ஒரு கட்டத்தில் முன் னோட்டத்தை விட்டு அதை விரும்பியவருக்கு ரிக்கெட்டுக் களை விற்றுத் தான் சில வேலைகளை முடித்தேன்.

**எதிர்கால ஈழம் சினிமா பெரும்பாலான கலைஞர்களை ஆவது ஒரே குடையின் கீழ் ஒன்றிணைத்து பயணிக்கும் வாய்ப்பு எப்படி இருக்கிறது?**

அப்படி ஒருங்கிணைப்பதற்கு எமக்குத் தேவைப் படுவது ஒரு அமைப்பு அல்லது சங்கமாகும். அப்படி ஒரு கட்டமைக்கப்படாத வரைக்கும் இது சாத்தியமற்ற ஒன்றாகும். அதே போல சினிமாத்துறைக்குள்ளும் இருந்தும் கூட இதைக் கட்டமைப்பது என்பது மிகப் பெரும் சிரமமான ஒன்றாகும். எங்களுக்குள் அங் கொன்றும் இங்கொன்றுமாக சிறு சிறு குழுக்களாகப் பிரிந்திருக்கிறோம். அதுமட்டுமல்ல இங்கு யாருக்கு யார் போட்டி என்றால் இயக்குனருக்கு கமராமென் மேல் போட்டியிருக்கும் நடிகருக்கு இசையமைப்பாளர் மேல் போட்டியிருக்கும் இப்படி சம்மந்தமே இல்லாமல் எமக் கான துறை எதுவோ அதை விட்டு விட்டு வேறு பக்கத்தில் போய் முட்டி மோதிக் கொண்டிருக்கிறோம். உதாரணத் துக்கு என் பட அறிவிப்பு விட்ட போது ஒரு இசையமைப் பாளர் எனக்கு எதிராக பேஸ்புக்கில் பதிந்து கொண்டு

## “ஈழ சினிமா என்பது இலங்கையில் உருவாக்கப்படும் தமிழ் சினிமாவுக்குரிய தனிப்பதமாக மாறும் காலம் வெகு தொலைவில் இல்லை”

திரிந்தார். இப்போது அடங்கி விட்டார். இப்படி பல பிளவுகள் இருக்கும் இடத்தில் இப்போது ஒரு குடைக்குள் வருவது என்பது சாத்தியமே இல்லை.

**ஈழத்தமிழருக்கு என்று இசை, சினிமா முயற்சிகள் கூட தென்னிந்தியாவில் இருந்து தான் பிரதிசெய்யப்படு கிறது என்கிற குற்றச்சாட்டுக்கு உங்கள் பதில்?**

உதாரணத்துக்கு வயல் வெட்டு நேரம் புதுக்குடி யிருப்புப் பக்கம் போய் பாருங்கள். எப்படி விதம் விதமான பாடல்களை விதம் விதமான இசையில் படிப்பார்கள் என்று. இளையராஜா, ரகுமான் எல்லாம் இசையைத் தேடி எத்தனை நாட்டுக்கு போனார்கள்? நாம் ஏன் பக்கத்து ஊருக்குப் போய்த் தேடக் கூடாது? மற்றையபடி தென் னிந்திய சினிமாவின் தாக்கம் இல்லாமல் நானோ நீங்களோ இருக்க முடியாது. காரணம் நானும் நீங்களும் முதல் முதல் பார்த்தது தென்னிந்திய சினிமாப் படங் களாகவே இருக்க முடியும். ஆனால் இன்று அவர்கள் எம் கதைகளை கடன் வாங்கும் அளவுக்கு வந்து விட்டார்கள் என்பதைக் கூட தெரியாமல் அவர்களுக்காகப் படம் செய்து கொண்டிருக்கிறோம்.

**ஈழம் சினிமா குறித்து வேறு எதாவது கூற விரும்பின்?**

ஈழ சினிமா பற்றி கூறுவதானால் அதை ஏதோ ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துக்கான வரையறை யுடன் பார்க்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை ஈழம் என்பது இலங்கைக்கு இன்னொரு பெயர். கடந்த காலங்களில் அடக்குமுறைகளுக்குள் இருந்து மீள் வதற்காக இயக்கங்கள் அப்பெயரைச் சரியாகப் பயன் படுத்திக் கொண்டதால் அது பிரதேசம் சார்ந்து வரையறுக்கப்பட்டாலும் ஈழ சினிமா என்பது இலங்கை யில் உருவாக்கப்படும் தமிழ் சினிமாவுக்குரிய தனிப் பதமாக மாறும் காலம் வெகு தொலைவில் இல்லை.

# இணைப்பில்லாமல் கிழக்குத் தமிழ் மக்களின் இருப்பை ஒருபோதும் பாதுகாக்கமுடியாது

**தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த 05.09.2017 அன்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத் தில் 'வடகிழக்கு இணைப்பும் முஸ்லீம் மக்களும்' என்கிற தலைப்பில் அரசியல் ஆய்வாளரும், சட்டத்தரணியுமான சி.அ. யோதிலிங்கம் ஆற்றிய உரை வருமாறு,**

அரசியல் விவகாரங்களை உணர்வு நிலையில் அல்லாது அறிவு நிலையில் அணுக வேண்டும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். நான் அரசியல்வாதி அல்ல அரசியல் ஆய்வுத்துறையை சேர்ந்தவன். எனது கருத்துக் கள் முடிந்த முடிவுகள் அல்ல. அனைத்துமே ஆய்வுகளுக் கும் பரிசோதனைக்கும் உரியவை. என்னுடைய கருத்துக் களையும் முடிந்த முடிவாக எடுத்துக் கொள்ளாமல் ஆய் வுகளுக்கும் பரிசோதனைகளுக்குமாக எடுத்துக் கொள்ளு மாறு மிகவும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இனப்பிரச்சனை என்பது தமிழ்மக்கள் ஒரு தேசமாக ஒரு தேசிய இனமாக இருப்பது அழிக்கப் படுவது தான். அதாவது தேசிய இனத்தைத் தாங்குகின்ற தூண்களாக இருக்கின்ற நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம், மக்கள் கூட்டம் என்பவற்றை அழிப்பதுதான் இனப்பிரச்சனை. அந்த இன அழிப்பின் உச்சம் தான் உயிர் அழிப்பு. தமிழ்மக்கள் அந்த உச்ச அழிவைச் சந்தித் திருக்கிறார்கள். சிங்கள தேசம் இலங்கைத்தீவு சிங்கள மக்களுக்கு மட்டுமெனக் கருதுவதால் தான் இந்த அழிவு இடம்பெற்றது.

எனவே அரசியல் தீர்வு என்பது இந்த அழி விலிருந்து தமிழ்மக்களை பாதுகாப்பதாக இருக்க வேண்டும். இதற்கு கோட்பாட்டுரீதியாக தமிழ்மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும். அவர் களுடைய ஆட்சி அதிகாரமாகிய இறைமையை அங்கீ கரிக்க வேண்டும். அவர்களுக்கு இயல்பாகவே உள்ள சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும். சுய நிர்ணய உரிமையை நடைமுறைப்படுத்தக் கூடிய ஒரு ஆட்சிப் பொறிமுறையை உருவாக்குதல் வேண்டும். இது கோட்பாட்டு ரீதியான விடயங்கள். இவற்றுக்கு அரசியல் யாப்பு சட்டவடிவம் கொடுக்கின்ற போது நான்கு விடயங்கள் முக்கியமானவை.

தமிழ்மக்களுடைய கூட்டுரிமையையும் கூட்டிருப் பையும் கூட்டடையாளத்தையும் பேணக்கூடிய வகையில் வடக்குகிழக்கு இணைந்த அதிகார அலகு என்பது முக்கியமானது.

தமிழ்மக்கள் தங்களுடைய சுயநிர்ணய உரி மையை தாங்களே பிரயோகிக்கக் கூடிய சுயாட்சி அதிகா ரங்கள் முக்கியமானது.



தொகுப்பு - விக்னேஸ்வரி

கூட்டும் பகிர்வும் என்ற தத்துவத்தின் அடிப்படை யில் ஒரு ஆட்சிப் பொறிமுறையை உருவாக்கினால் மத்திய அரசில் தமிழ்மக்கள் ஒரு தேசிய இனமாக பங்கு பற்றுவதற்கான வாய்ப்பும் பொறிமுறையும் உருவாக்கப் படுதல் வேண்டும் என்பது மூன்றாவது விடயமாகும். மத்தியஅரசை ஒரு சிங்கள பௌத்த அரசாக வைத்துக் கொண்டு எந்த அதிகாரப் பகிர்வு வழங்கினாலும் அது ஒருபோதும் நடைமுறைக்கு வரப்போவதில்லை என்பதுதான் எங்களுடைய வரலாற்று அனுபவம்.

நான்காவது அந்த அதிகாரங்களுக்கான பாது காப்பு. ஒரு கையால் கொடுத்து விட்டு மறுகையால் பறித்த அனுபவங்கள் எங்களுக்கு நிறையவே இருக் கிறன. ஆகவே இந்த நான்கு விடயங்களும் அரசியல் தீர்வில் உள்ளடக்கப்பட வேண்டியது அவசியமானது என நான் நினைக்கிறேன்.

இந்த இடத்தில்தான் முதலாவதாக வருகின்ற இந்த அதிகார அலகு என்பது முக்கியமாக இருக்கின்றது. நான் ஏற்கனவே கூறினேன் தமிழ்மக்கள் தங்களது கூட்டி ருப்பையும், கூட்டுரிமையையும், கூட்டடையாளத்தையும் பேணுவதற்கு இந்த வடக்குக்கிழக்கு இணைப்பு என்பது மிகவும் அத்தியாவசியமானது. அது மாத்திரமல்ல கிழக் கில் தமிழ்மக்களினுடைய இருப்பை பாதுகாப்பதற்கும் பேணுவதற்கும் இந்த வடக்கு – கிழக்கு இணைப்பு என்பது மிகவும் அவசியமானதென்று நான் கருதுகின்றேன்.

கூட்டிருப்பு, கூட்டுரிமை, கூட்டடையாளம் என்பவை தேசிய இனத்தினுடைய அடிப்படைகள். இவை இல்லாமல் ஒருபோதுமே ஒரு தேசிய இனம் தேசிய மாக எழுச்சியடையவே முடியாது. இவற்றைச் சிதைப்பது என்பது தேசிய இனத்தை சிதைப்பதற்கு சமமானது. மாறி

மாறி வந்த சிங்கள ஆட்சியாளர்கள் அதனைத்தான் செய்தார்கள். கூட்டிருப்பு சிதைந்தால் கூட்டுரிமையும், கூட்டடையாளமும் தன்னுடையபாட்டிலேயே சிதைந்து போகும் வாய்ப்புக்கள் உருவாகும். கூட்டிருப்பை சிதைப் பதற்கு ஒரேஒரு வழி அந்த தேசிய இனம் இருக்கின்ற நிலத்தின் ஒருமைப்பாட்டைச் சிதைப்பதுதான். சிங்கள ஆட்சியாளர்கள் சுதந்திரத்திற்கு முதலே இதற்கான முயற்சிகளில் இறங்கி இருந்தார்கள் என்பதை நாங்கள் வரலாற்று ரீதியாகப் பார்க்கின்றோம்.

ஆரம்பத்தில் அம்பாறை மாவட்டத்தில் கல்லோயாத் திட்டத்தில் தொடங்கியிருந்தாலும் கூட அவர்களுடைய முழுக் கவனமும் தமிழ்மக்களுடைய மையமாக இருக் கின்ற திருகோணமலை மாவட்டத்தை சிதைப்பது தான். எல்லா வகையான நிலப்பறிப்பு முயற்சிகளும் திரு கோணமலையில் அரங்கேறியதை நாங்கள் பார்க்கின் றோம். திட்டமிட்ட விவசாயக் குடியேற்றம், சட்டவிரோத மான விவசாயக்குடியேற்றம், வியாபாரக்குடியேற்றம், கைத்தொழில் குடியேற்றம், புனித பிரதேசத்துக்கான குடி யேற்றம், முப்படைக்கான பண்ணைக் குடியேற்றம் என அனைத்து குடியேற்ற முயற்சிகளும் பரீட்சித்து பார்க்கப் பட்ட ஒரு மாவட்டம்தான் திருகோணமலை மாவட்டம்.

அல்லைத்திட்டம், கந்தளாய்த்திட்டம், பதவியாத் திட்டம், முறவெவாத்திட்டம், மகாதிவுள்வெவாதிட்டம் என பல விவசாயத்திட்டங்கள் மூலம் இந்த நிலப்பறிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒற்றையாட்சி கட்ட மைப்பும் அதன் வழி வந்த நிர்வாக அதிகாரமும் இந்த நிலப்பறிப்பு முயற்சிகளுக்கு உதவியாக இருந்ததை நாங்கள் வரலாற்றில் பார்க்கின்றோம். உள்ளூராட்சி திட்டங்களும் தேர்தல் தொகுதிகளும் அந்த குடியேற்றங் களுக்கு அரசியல்ரீதியான அந்தஸ்தினை கொடுத் ததினையும் நாங்கள் வரலாற்று ரீதியாகப் பார்க் கின்றோம். ஆயுதப்போராட்டம் இந்த நிலப்பரப்பை மட்டுப்படுத்தி வைத்திருந்தது. ஆனால் இன்று திரும்ப அந்த நிலப்பறிப்பு இடம்பெறுவதை நடைமுறையில் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

**சிங்களக் குடியேற்றத்தின் நிலப்பறிப்புக்கு அப்பால் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி முஸ்லிம் மக்களும் தங்களுடைய நிலத்தைப் பறிக்கின்றார்கள் என்ற குற்றச் சாட்டை கிழக்குத் தமிழர்கள் இன்று எழுப்பி வருக் கின்றார்கள். கிழக்கில் இன்று தமிழ்மக்களிடம் அதிகாரம் இல்லை. அதிகாரத்தை பெற்றிருக்கும் தரப்புக்கள் இன்று கிழக்குத் தமிழ்மக்கள் மீது ஒரு ஆக்கிரமிப்பு யுத்தத்தை தொடங்கியிருக்கின்றனர். இதை எதிர்த்து ஒரு தற்காப்பு யுத்தத்தைக்கூட நடாத்த முடியாத நிலையில் கிழக்குத் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள். கிழக்கில் ஒரு வகையில் கொஞ்சமாவது பலமாக இருக்கின்ற மாவட்டம் மட்டக் களப்பு மாவட்டம் தான். மட்டக்களப்பு மாவட்டம் பலமாக இருக்கின்ற போதுதான் திருகோணமலை மாவட்டத்திலும் அம்பாறை மாவட்டத்திலும் எஞ்சி யிருக்கின்ற தமிழ் பிரதேசங்களையாவது பாதுகாக்க முடியும். ஆனால் இன்று மட்டக்களப்பு மாவட்டம் தன்னையே பாதுகாக்க திராணியற்று திணறிக்கொண்டிருப்பதை நாங்கள் பார்க்கின்றோம்.**

**இந்தியாவும் அமெரிக்கா தலைமையிலான மேற் குலகமும் இனப்பிரச்சனையை வடக்கோடு மட்டும்தான் முடக்குவதற்கு முயற்சிக்கின்றன. வெளிநாட்டு இராஜ தந்திரிகள் ஒருவரும் கிழக்குக்குச் செல்வதில்லை. எங்களு டைய அரசியல் தலைமைகளும் கிழக்குக்குச் செல்லுங் கள் என்று அவர்களிடம் கேட்பதுமில்லை. தாங்கள் வெளி நாடுகளுக்குச் செல்லும் போதும் கிழக்குப் பிரதிநிதி களைக் கூட்டிச் செல்வதுமில்லை. தாங்களும் கிழக்கு விவகாரத்தைக் கதைப்பதுமில்லை. மொத்தமாக கிழக்குத் தமிழ்மக்களை ஒரு இருட்டுக்குள் விட்ட நிலைமைதான் இருக்கின்றது. இந்த நிலைமையில்தான் வடக்கு – கிழக்கு இணைப்பு என்பது அடிப்படையானது. பேரம்பேசலுக்கு அப்பாற்பட்டது என நான் கூறவருகின்றேன்.**

இங்குதான் முஸ்லிம் விவகாரம் முக்கியமானதாக இருக்கின்றது. வடக்கு – கிழக்கு முஸ்லிம்களினதும் தாயகம் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. ஆனால் வடக்கு – கிழக்குக்கென தமிழ்மக்களால் நகர்த்தப் பட்ட அரசியலுக்குள் முஸ்லிம் மக்கள் இணையவில்லை. அவர்கள் அதற்கு வெளியே தான் நின்றனர். நபர்களாக ஒருசிலர் பங்கு கொண்டனரே தவிர முஸ்லிம் சமூகம் அந்த அரசியலுக்கு வெளியே தான் நின்றது. தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இணைந்த தமிழ் பேசும் மக்கள் என்ற பொது அடையாளத்துக்குள் வருவதற்கு முஸ்லிம் மக்கள் தயாராக இருக்கவில்லை. அவர்கள் தங்களை மத அடிப்படையிலான ஒரு தனியான இனமாகவே அடையாளப்படுத்தியிருந்தனர். அவ்வாறு தனியாக தங்களை அடையாளப்படுத்துவதற்கு அவர் களுக்கு உரிமை இருக்கின்றது என்பதையும் நான் இங்கு கூறிவைக்க விரும்புகின்றேன்.

தமிழ் அரசியல் மட்டும் தான் முஸ்லிம்களையும் தமிழ்பேசும் மக்கள் என்று உள்ளடக்கும் ஒரு கோட் பாட்டைத் தூக்கிப்பிடித்த நிலைமை காணப்பட்டது. ஒருவகையில் தமிழ் பேசும் மக்கள் என்ற கோட்பாடு முஸ்லிம் அரசியலைக் கொச்சைப்படுத்துகின்றது. ஏனென்றால் அவர்கள் அதுக்கு இணையவுமில்லை, வரவுமில்லை. தமிழ் அரசியலைப் பொறுத்தவரையில்

**“தமிழ்மக்கள் தங்களது கூட்டி ருப்பையும், கூட்டுரிமையையும், கூட்டடையாளத்தையும் பேணுவதற்கு இந்த வடக்குக் கிழக்கு இணைப்பு என்பது மிகவும் அத்தியாவசியமானது”**

அதுவே கை விலங்காகிவிட்டது. தமிழ் பேசும் மக்கள் என்கிற கோட்பாட்டைப் பேண வேண்டும் என்பதற்காகவே அங்கு வருகின்ற விடயங்களை கையாளுகின்ற மூலோபாயங்களையும், தந்திரோபாயங்களையும் எமது அரசியல் தலைமைகள் வகுக்க தவறியிருக்கின்றன என்பதையும் நாங்கள் வரலாற்றில் பார்க்கின்றோம். இந்த இடத்தில் தான் இணைப்பை ஏற்றுக்கொள்வதில் முஸ்லிம் மக்களுக்கு பல நெருக்கடிகள் இருக்கின்றன. நான் அதை மறுக்கவில்லை.

முதலாவது வடக்கு – கிழக்குக்கென தனியான அரசியல் முஸ்லிம் மக்கள் மத்தியில் கட்டியெழுப்பப்பட வில்லை. அவர்கள் முழு இலங்கைக்குமான முஸ்லிம் அரசியலைத் தான் கட்டியெழுப்பியிருந்தார்கள். இதனால் வடக்கு – கிழக்கு இணைப்பு என்பது தென்னிலங்கை முஸ்லிம்களை பாதிக்கும் என அவர்கள் கருதுகிறார்கள்.

இரண்டாவதாக வடக்குக்கிழக்கு இணைந்தால் தங்களு டைய விகிதாசாரம் குறைந்துவிடும் அதனால் தங்களு டைய அதிகாரம் குறைந்துவிடும் என அவர்கள் நினைக் கின்றார்கள்.

மூன்றாவது கிழக்கில் இரண்டாவது பெரும்பான் மையாக இருப்பதால் இன்னமும் சில வருடங்களில் முதலாவது பெரும்பான்மை இனமாக நாங்கள் மாறி விடுவோம் எனவே கிழக்கின் அதிகாரம் தங்களிடமே நிலைத்து நிற்கும் என அவர்கள் நினைக்கிறார்கள்.

நான்காவது வடக்குகிழக்கு இணைப்பை ஏற்றுக் கொண்டால் எதிர்ப்பு அரசியலுக்கு முஸ்லிம்களும் தயாராக வேண்டும். அதன் வளர்ச்சியாக போராட்ட அர சியலுக்கும் தயாராக வேண்டும். முஸ்லிம்களிடம் அந்த அரசியல் கலாசாரம் வளரவேயில்லை. அதனால் அதுவும் அவர்களுக்கு ஒரு தடையாக இருக்கின்றது.

ஐந்தாவது நீண்ட போர் காரணமாக சிங்கள ஆட்சி யாளர்கள் முஸ்லிம் மக்களுக்கு சில சலுகைகளை வழங்கியிருந்தனர். இந்த சலுகையினால் கிழக்குத் தமிழ் மக்களை விட பொருளாதார ரீதியில் முஸ்லிம்கள் மேல்நிலையில் இருக்கின்றனர். இந்த சலுகைகள் நிரந் தரமானவையென அவர்கள் நினைக்கப் பார்க்கின்றார்கள்.

ஆறாவது ஆயுதப்போராட்ட காலத்தில் ஏற்பட்ட வன்முறைகள் காரணமாக கிழக்கில் இரு சமூகங்களும் ஒருவரை ஒருவர் நம்பத் தயாரில்லாத நிலைமையே காணப்படுகிறது. இந்தக் காரணங்களினால் வடக்குகிழக்கு இணைப்பைவிட வடக்குகிழக்கு பிரிந்து இருப்பதுதான் தமது நலன்களுக்கு உகந்தது என முஸ்லிம் மக்கள் தற் போது கருதுகிறார்கள். இது முஸ்லிம் பெரும்பான் மையுடைய உளவியல் விருப்பமே. இன்று வடக்கு கிழக்கு இணைப்புக்கு சார்பாக முஸ்லிம் கட்சியோ, முஸ்லிம் தலைவரோ அல்லது ஒரு முஸ்லிம் வெகுஜன அமைப்போ இல்லை என்பதுதான் நடைமுறை உண்மை. முஸ்லிம்களுக்கு தனியான அதிகார அலகு தரப்படும் அதற்கான ஒத்துழைப்புக்களை நாங்கள் வழங்குவோமென பல தடவை கூறியிருந்தும் நல்லெண்ண நடவடிக்கையாக கிழக்கு மாகாண அதிகாரத்தை விட்டுக்கொடுத்தும் கூட அவர்கள் ஆதரவு கொடுக்கப் பின் நிற்கின்றார்கள்.

இந்த நிலையில்தான் முஸ்லிம்களும் இணைந்த வடக்கு – கிழக்கில் ஒரு அதிகார அலகு உருவாக்குவது இப்போதைக்கு சாத்தியமில்லை என நான் நினைக் கின்றேன். அவர்கள் இணைந்தால் எங்களுக்கு சந்தோச மான விடயம். ஆகவே அவர்களுக்கு எந்தவகை யான இடம் என்பதை அவர்களோடு பேசி தீர்க்கலாம். ஆனால் நடைமுறை உண்மை அவர்கள் இந்த இணைப் புக்கு முன் வர தயாரில்லாத நிலைமைதான் காணப்படு கின்றது. ஆனால் இது கிழக்கு தமிழ் மக்களுக்கு வாழ்வா சாவா பிரச்சனை. அவர்கள் இன்று அரசியல் தலைமை களில் நம்பிக்கை இழந்து பௌத்த பிக்குகளுக்கு பின்னால் போகின்ற நிலைமை காணப்படுகின்றது. இணைப்பு இல்லாமல் கிழக்குத் தமிழ் மக்களின் இருப்பை ஒரு போதுமே பாதுகாக்க முடியாது.

இந்ந நிலையில்தான் மாற்று யோசனை நோக்கி நாங்கள் நகர வேண்டுமென நான் நினைக்கின்றேன். அந்த மாற்று யோசனை என்பது வடகிழக்கிலுள்ள தமிழ் பிரதேசங்களை நிலத்தொடர்ச்சியற்ற வகையிலாவது இணைத்து ஒரு இணைந்த அதிகார அலகை உருவாக்கு வது தான். இந்த நிலத்தொடர்ச்சியற்ற அதிகார அலகு என்பது உலகிற்கு புதியது அல்ல. எங்களுடைய அண்மை யிலுள்ள நாடான இந்தியாவிலேயே அது நடைமுறை யிலுள்ளது. பாண்டிச்சேரி மாநிலம் இந்த நிலத் தொடர்ச்சி யற்ற மாநிலத்துக்கு ஒரு உதாரணம். பாண்டிச்சேரி மற்றும் காரைக்கால் மட்டும் தமிழ் நாட்டிலுள்ளன. ஏனாம் என்கின்ற பகுதி ஆந்திராவில் உள்ளது. மாசி என்ற பகுதி கேரளத்தில் உள்ளது. நான்கு நிலத்தொடர்ச்சியற்ற பகுதிகளை இணைத்து அவர்கள் ஒரு அதிகார அலகை உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே அப்படியான ஒரு அதிகார அலகுதான் எங்களுக்குத் தேவையென நான் நினைக்கின்றேன்.

எதிர்காலத்தில் முஸ்லிம் மக்களும் மாறலாம். முஸ்லிம் மக்கள் மாறுகின்ற போது அவர்களோடு இணைந்த வகையில் வடக்கு கிழக்கு இணைப்பை மேற்கொள்வது எங்களுக்கு சுலபமாக இருக்கலாம். ஆனால் இன்றைக் குள்ள நிலைமையில் நாங்கள் செய்யவேண்டியது எது என்பதுதான் இன்றைக்குள்ள முக்கியமான விடயம். ஆகவே இந்த விடயத்தையும் கவனத்தில் எடுத்து அரசியல் சக்திகள், அரசியல் தரப்புக்கள் தங்களுடைய செயற் பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென நான் நினைக் கின்றேன். தமிழ்மக்கள் பேரவை இது தொடர்பான ஆய்வுகளையும் விவாதங்களையும் நடாத்துவது நல்லது என்பதுதான் என்னுடைய கருத்து. காலத்தை நாங்கள் விரயமாக விடுவது கிழக்கு தமிழ் மக்களின் சிதைப்பிலே தான் முடியும். ●

# இது சந்திக்கு வரவேண்டிய சங்கதி

சட்டத்தரணி மௌசூர் மௌலானா பேச்சு

**'ஓர் அரசியல் தீர்வை எதிர்கொள்ளல்' எனும் தலைப்பில் புதிய அரசியல் அமைப்பு தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் தமிழ்மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த 05.09.2017 அன்று வீரசிங்கம் மண்ட பத்தில் இடம்பெற்றது.**

**இதில் சித்திலெப்பை ஆய்வு மையத்தின் தலை வரும், சட்டத்தரணியுமான திரு மௌசூர் மௌலானா "வடக்கு கிழக்கு இணைப்பும் முஸ்லிம்களும்" என்கிற தலைப்பில் திரு. ஜோதிலிங்கம் அவர்களின் உரைக்கு பதிலுரை ஆற்றியிருந்தார். அவ்வுரை அப்படியே வருமாறு,**



தொகுப்பு - தேனுகா

வடக்கு–கிழக்கு இணைப்பும் முஸ்லிம்களும் என்கின்ற விவகாரம் சர்ச்சைக்குரிய விவகாரமல்ல. சந்திக்கு வரவேண்டிய சங்கதி என்பதுதான் என்னுடைய பார்வை. கத்தரிக்காய் முற்றினால் சந்தைக்கு வந்துதான் ஆக வேண்டும். அந்த யதார்த்தத்தை பேசுவதற்கு முஸ்லிம் தரப்பிலிருந்து பொறிமுறை உருவாக்கப்படவில்லை என்பது எனது முதலாவது குற்றச்சாட்டு. "காணிநிலம் வேண்டும் பராசக்தி" என்று பாடினான் பாரதி. நாங்கள் சமஷ்டி என்று பேசினாலும், வடக்கு–கிழக்கு இணைப்பு என்று பேசினாலும் அவை நிலம் சார்ந்த ஒரு போராட்டத் தினுடைய அரசியல் பரிமாணங்கள் தான். வடக்கு–கிழக்கு என்பது காணியும் நிலமும் சேர்ந்த பிரதேசம். அது தமிழ் பேசும் மக்களின் பூர்வீகமும், தமிழ்பேசும் மக்களுடைய தாயகமும் என்பதே.

நாங்கள் 1956 ஆம் ஆண்டின் திருமலை தீர் மானத்திலிருந்தே ஒன்றாகத்தான் பயணித்து வந்தோம். 1977 ஆம் ஆண்டு தமிழர்விடுதலைக் கூட்டணியினுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூட தமிழர்களுக்கான வடக்கு–கிழக்கு இணைந்த தாயகத்தில் தமிழர்களுக்கான சமஷ்டி யும் முஸ்லிம்களுக்கான சமஷ்டியும் என்கின்ற விவ காரங்கள் பேசப்பட்டு தான் வந்தன. கங்காருவையும் குட்டியையும் போல் தமிழ் தேசியத்தின் மடியில் தான் முஸ்லிம் தேசியம் அடைகாக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் ஆங்காங்கே அந்த தாய்மையை கேள்விக்கு உட்படுத்திய கருத்தியல் ரீதியான சம்பவங்களும் ஆயுதக் குழுக்களினால் யுத்தகாலத்தில் ஏற்பட்ட துன்பியல் நிகழ்வுகளும் எங்களுடைய தாய்மையை கேள்விக் குட்படுத்திவிட்டது. அந்த தாய்மை கேள்விக்குட்படுத்தப் பட்டதன் விளைவாக வடக்கு–கிழக்கு இணைப்பிற்கு முஸ்லிம்கள் எதிரானவர்கள் என்கின்ற ஒரு பரப்புரையை இந்த அரசாங்கம் திட்டமிட்டு பரப்புரை செய்து வரு கின்றது என்பதையும் தான் நான் பதிவு செய்து கொள்ள ஆசைப்படுகின்றேன்.

வடக்கு– கிழக்கு இணைப்பு என்கின்ற விவகாரத்தில் இரண்டு பரிமாணங்கள் இருக்கின்றன. இலங்கையில் முஸ்லிம்களுடைய தேசியம் என்று பார்க்கின்ற போதிலும் அதில் இரட்டைப் பரிமாணங்கள் இருக்கின்றன. வடக்கு–கிழக்கு மண்சார்ந்த தேசியம், வடக்கு – கிழக்கிற்கு வெளியே இருக்கின்ற முஸ்லிம்களினுடைய இன்னொரு வகையான தேசியம். ஆக வடக்கு – கிழக்கு இணைப்பு என்று வருகின்ற பொழுது இரண்டு தரப்பும் பேசியே ஆகவேண்டும். ஒன்று தமிழர்களும் முஸ்லிம்களும் பேசியாக வேண்டும். மற்றொன்று வடக்கும் கிழக்கும் பேசியாக வேண்டும். இதனை துல்லியமாக பேசுவதற்கு முஸ்லிம் தரப்பில் காணப்படுகின்ற பொறிமுறைக் கோளாறுகள் என்ன என்பதை குறிப்பாக வடக்கு மாகாண ஆளுமைகள் புரிந்து கொள்ள வேண்டும். வடக்கோடு கிழக்கு இணைவதை முஸ்லிம்கள் எந்தக் கண்ணோட்டத் தோடு பார்க்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இதில் உரித்தோடு கருத்துச் சொல்ல வேண்டி யது, நாங்கள் வடக்கு–கிழக்கு பாரம்பரியத் தனித் துவதத்திற்காக உருவாக்கிய முஸ்லிம் தேசியத்தின் பிர தான கட்சி. ஆனால் அதன் தலைமை துரதிஷ்ரவசமாக மாற்றான் தாய் மனப்பாங்கோடு வடக்கு–கிழக்குக்கு வெளியிலிருந்து வந்தது எங்களுக்கு ஒரு சாபக்கேடு என்பதை இங்கு நான் பகிரங்கமாக கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சேதாரம் இல்லாத விட்டுக்கொடுப்பு என்கின்ற ஒரு வார்த்தை பிரயோகத்தை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் குறிப்பிட்டிருந்தார். அவருக்கு சேதாரம் பற்றியும் புரிய

வில்லை, செய்கூலி பற்றியும் புரியவில்ல. செய்கூலி பற்றி உணர்ந்தவனுக்குத்தான் சேதாரம் பற்றிய வலி தெரியும் என நான் அடிக்கடி பல விழாக்களில் குறிப்பிட்டு வந்திருக் கின்றேன். இங்குள்ள பிரச்சனை அவர் வடக்கு–கிழக்கு இணைப்புத் தொடர்பாக ஒரு சைலன்ட் ஒப்சேவராக இருந்து வருகிறார். ஏனென்றால் அவர் கண்டி மாவட்டத் தில் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்றால் அவர் உரித்தோடு வடக்கு – கிழக்கு முஸ்லிம்கள் தொடர்பாக முஸ்லிம் தேசியத்தின் உரத்த தொனியில் கருத்து தெரி விக்க முடியாது. அதே போன்று இன்று தமிழ் தேசியத்திற்கு வந்திருக்கிற வினை என்னவென்று பார்த்தால் ஐக்கிய தேசியக் கட்சியினுடைய விம்பமாக தமிழ்தேசியத்தின் தலைமைகள் தொடர்ந்தும் இருப்பதற்கான பொறிக்குள் தமிழ்த்தேசியத்தை பிரநிதித்துவம் செய்கின்ற தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இன்று வந்திருக்கின்றது.

இருபதாவது திருத்தச்சட்டம் ஏற்கனவே எங்களுக்கு உடன்பாடில்லாத எங்களுடைய எதிர் பார்ப்புக்களை நிறைவேற்றாத மாகாணசபைகளிடம் இருக்கின்ற கொஞ்ச நஞ்ச அதிகாரங்களையும் பறிக் கிறது. மாகாணசபையின் ஆயுள் காலத்தை தீர்மானிக் கும் அதிகாரம் உட்பட அனைத்து அதிகாரங்களையும் மீண்டும் பாராளுமன்றத்திற்கு கொடுப்பதென்றால் இந்த தேசிய அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல் என்ன? தேசிய அரசாங்கம் என்று சொல்வதற்கான கருத்தியல் சார்ந்த வரைவிலக்கணத்திலும் அவர்கள் இல்லை. நல்லாட்சி என்கின்ற அடைமொழிக்குரிய யோக்கியதையும் இவர்களுக்கு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் தான் உள்ளூராட்சி சபை சட்டத்திருத்தம் நிறைவேற்றியிருக்கிறது. அதில் பகிரங்கமாகவே முஸ்லிம் தலைமைகள் இதில் முஸ்லிம் களுக்கு அநீதி இழைக்கப்பட்டதாக வாக்கெடுப்பில் கலந்து கொள்வதற்கு ஐந்து நிமிடங்கள் முன்னர் பாராளுமன்றத் தில் குறிப்பிடுகிறார்கள். ஆகக் குறைந்தபட்சம் தார்மீக ரீதியில் அந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல்கூட அவர்கள் பகிஸ்கரிக்கவில்லை. அவர்கள் கபினற் அந்தஸ் துள்ள அமைச்சராக தொடர்ந்து இருக்க வேண்டும். ஒரு அரசியல் என்று வருகின்ற போது கருத்தியலும் இருக்க வேண்டும். உணர்வுபூர்வமான உணர்ச்சிகளும் இருக்க வேண்டும். இன்று துரதிஷ்டவசமாக முஸ்லிம்களின் பிரதான அரசியல் கட்சியில் கருத்தியலுமில்லை. உணர்வு மில்லை. வெறுமனே வாய்ச்சவாடல்களும் தேர்தல் கால உணர்ச்சிபூர்வ அரசியல் கலாசாரமும்தான் இருக்கிறது என்பதை இங்கு நான் மிகவும் வேதனையுடன் பதிவு செய்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த நிகழ்வில் இரண்டு காரணங்களின் அடிப்படையில் நான் கலந்து கொள்வது அவசியமென்று எனக்குப்படுகிறது. சித்திலெப்பை ஆய்வு மன்றத்தினுடைய தலைமைப்

## “கங்காருவையும் குட்டியையும் போல் தமிழ் தேசியத்தின் மடியில் தான் முஸ்லிம் தேசியம் அடை காக்கப்பட்டுக் கொண்டிருந்தது”

பொறுப்பை நான் ஏற்றிருக்கின்றேன். எம்.ஐ மொஹைதீன் அவர்கள் எழுதிய Ethnic Conflict and devolution of power என்கின்ற நூலினுடைய தமிழாக்கத்தை எங்க ளுடைய ஆய்வுமன்றத்தால் வெளியிட்டோம். இணைந்த வடக்குகிழக்கில் தென்கிழக்கு அலகு என்கின்ற விவ காரத்தை கூறிய முக்கியத்துவம் பெற்ற நூல் இது. வெளியீட்டு விழாவுக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் சுரேஷ்பிரேமச்சந்திரன் அவர்களையும் அழைத் திருந்தோம். அந்த அழைப்பிற்கு பின்னர் நாங்கள் தொடர்ச்சியாக தமிழ்த்தரப்போடு முஸ்லிம் தரப்பு எவ் வாறான ஆக்கபூர்வமான சினேகபூர்வ அரசியல் கலந்து ரையாடல்களை முன்னெடுத்து செல்வது என்பது தொடர்பாகவும் பேசினோம். முஸ்லிம்களுக்கு அரசி யல் கட்சிகளுக்கு அப்பால் ஒரு தேசிய முஸ்லிம் சபை வேண்டும் என்று நாம் குறிப்பிட்டிருந்தோம். அதனுடைய ஒரு வெளிப்பாடாக கிழக்கு மாகாண சிவில் சமூகமும் அரசியல்வாதிகளும் எங்களுடைய இந்தக் கருத்தை அடி யொற்றி கிழக்கு மக்கள் அவையம் என்ற ஒன்றை உரு வாக்கியிருக்கிறோம். அதனுடைய இணைச்செயலாளர் களில் ஒருவர் நான் என்கின்ற வகையில் கிழக்கு மக்கள் அவையம் தமிழ்மக்கள் பேரவையை உத்தியோக பூர்வ மாக வடக்கு–கிழக்கு விவகாரம் தொடர்பாக நீண்ட கலந் துரையாடலுக்கு பகிரங்கமாக அழைக்கின்றது என்பதை யும் இந்நிகழ்வில் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன்.

வடக்கு–கிழக்கு இணைப்பு–பிரிப்பு என்கின்ற விவ காரத்தில் முஸ்லிம் அரசியல் தலைமைகளிடம் இருக் கின்ற குழப்பம் என்பது அவர்களுடைய அரசியலை தக்க வைத்துக் கொள்வதற்கான மொழியாடல்கள் சார்ந்த விடயங்கள் தான். நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல 1956ஆம் ஆண்டு திருமலைத் தீர்மானமும், 1977 ஆம்

ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனமும் அஷ்ரப் அவர்களுடைய வருகைக்குப் பின்னர் முஸ்லிம் தனித்துவ அரசியல் வந்த பிற்பாடு எட்டப்பட்டதே பாண்டிச்சேரி முறையிலான தென்கிழக்கு அலகு. முதன்முதலில் அதற்கு உரிமை கூறியவர் எம்.ஐ.முகைதீன் அவர்கள். 80ஐ தாண்டி யிருக்கும் அந்த மனிதரை முஸ்லிம் சமூகம் சார்பாக அண்மையில் தான் வாழ்த்தக் கிடைத்தது என்பதையும் குற்றவுணர்வோடு இங்கு பகிர்ந்து கொள்ள விரும்பு கின்றேன்.

வடக்கு–கிழக்கு இணைக்கப்படுகிற பொழுது முஸ்லீம்களுக்கான தென்கிழக்கு அலகானது முஸ்லிம் களுக்கான சமஷ்டி. வடக்கு–கிழக்கு இணைக்கப்படும் பொழுது தமிழர்களுக்கான சமஷ்டியும் முஸ்லிம்களுக் கான சமஷ்டியும் என்று தமிழ் தேசியத்தில் பாசறையில் வளர்ந்த அனைத்து தமிழ் முஸ்லிம்களும் ஏற்றுக் கொண்ட விவகாரம். இன்று அந்த இரண்டு தரப்பினராலும் அந்த நேர்கோட்டு அரசியல் தத்துவத்தில் பேசுவதற்கான வடிகால்கள் உருவாக்கப்படவில்லை. இங்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா அவர்களைப்பற்றி கிழக்கிலும், கிழக்கிலுள்ள அரசியல் தலைமைகளுடைய யதார்த் தத்தை பற்றி பிழையாக வடக்கிலும் தவறாக புரிந்து கொள்ளச் செய்வதற்காகவே இந்த அரசியல் முரண் பாட்டை உருவாக்குகிறார்கள். நாங்கள் தமிழர்களாக முஸ்லிம்களாக ஒரு மேசைக்கு வருகிற போது இது ஒரு பாரிய விவகாரமாக எனக்குத் தெரியவில்லை.

ஒரே ஒருவிடயத்தை நான் குறிப்பாக கோடிட்டு காட்ட விளைகிறேன். தற்பொழுது முதலமைச்சர் அவர் களும், சட்டத்தரணி சட்டவிரிவுரையாளர் குருபரன் அவர்களும் குறிப்பிட்டது போல் இலங்கையில் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்ற பூகோள அரசியல், சர்வதேச அரசியல், இவர்களுடைய உள்ளீடுகள், இவர்களுடைய தலையீடுகள் இந்தியாவும், அமெரிக்காவும், சீனாவும் இங்கு ஆடுகிற சித்து விளையாட்டுக்கள் தமிழ் முஸ்லிம் உறவை பல துருவங்களாக தொடர்ந்தும் விரிசல் நிலை யில் வைத்திருக்கவே நடத்தப்படுகின்றன. இதற்கு முதலில் நாங்கள் தீர்வு காணவேண்டும். குறிப்பாக தமிழர் களுடைய அறிவியல் மையம் வடக்கில் இருப்பது போல் வடக்கு–கிழக்கில் முஸ்லிம்களுடைய அறிவியல் மையம் கிழக்கிலிருக்கின்றது. இந்த யதார்த்தத்தை நாங்கள் புரிந்து கொள்ளத்தான் வேண்டும்.

இங்கு மிகவும் உணர்வு பூர்வமான ஒரு விடயம் இருக் கின்றது. இன்று வடக்கு கிழக்கு பிராந்தியங்களில் தமிழர்களும் முஸ்லிம்களும் நிலத்தொடர்பற்ற முறை யில் இணைந்து வாழ்கிறோம். ஆனால் அமெரிக்காவில் நடந்த செப்ரம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் முஸ்லிம் களை சர்வதேச ரீதியில் பயங்கரவாதிகளாகச் சித்த ரிக்க வேண்டிய ஒரு சர்வதேசிய அரசியல்பொறி இன்று பிராந்திய ரீதியில் இறுகி இருக்கிறது. இதனால் வடக்கு–கிழக்கு இணைப்பு என்று வருகிற பொழுது முஸ்லிம் கள் அவர்களுடைய இயற்கையான பீதியினை வெளிக் காட்டுகிறார்கள். குறிப்பாக இந்திய வல்லாதிக்கத்துக்குள் இணைந்த வடக்குகிழக்கு ஒரு பூரண கட்டுப்பாட்டுக்குள் வருகின்ற பொழுது ஏற்கனவே இந்தியாவில் காப்பீடு இல்லாத முஸ்லிம் சமூகத்துக்கு இருக்கின்ற அந்த பூகோள அரசியல் பிரச்சினை இலங்கையிலும் தோன்றிவிடாது என்பதற்கு என்ன உத்தரவாதம் என்கின்ற அங்கலாய்ப்பு முஸ்லிம்களுக்கு இருக்கின்றது.

இன்று பொதுபலசேன விவகாரம் சூடு பிடித்த போது சில அப்பாவி அறிவியலுக்கு அப்பாற்பட்ட சிலர் கிழக்கில் வந்து இந்த முஸ்லிம்களுக்கு எதிராக இந்த பொதுபலசேன அவர்களுடைய காணிநிலங்களை அபகரித்தால் நல்லது தானே என்று பேசுகின்ற அளவுக்கு சில தரப்பினர் உருவாக் கப்பட்டிருக்கிறார்கள். இது தொடர்ச்சியான ஒரு புரிந்து ணர்வில் தமிழ்தேசியமும் முஸ்லிம் தேசியமும் பயணிக்க வில்லை என்பதைக் காட்டுகிறது. வடக்கும்–கிழக்கும் பேசிக்கொள்ளவில்லை, எங்களுடைய விவகாரங்களில் உள்ளகப் பொறிமுறையை நாங்கள் உருவாக்கவில்லை. இவற்றால் வந்த பிரச்சனையாகவே நான் இதைப் பார்க் கின்றேன். அதனால்தான் தமிழ் மக்கள் பேரவை கிழக்கு மக்கள் அவயத்தோடு பேச வேண்டும். தமிழ்த்தரப்பும் முஸ்லிம் தரப்பும் பேச வேண்டும் என்கின்ற விடயத்தை நான் இங்கு குறிப்பிட வருகிறேன். இன்று தமிழ்த்தேசியத் தினுடைய எதிர்காலம் என்பது அனைத்தையும் தாண்டி ஐக்கிய தேசிய கட்சிக்கும் சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையே ஏற்படுகின்ற உள்ளக மோதலினால்தான் சிதைக்

**“இன்று துரதிஷ்டவசமாக முஸ்லிம்களின் பிரதான அரசியல் கட்சியில் கருத்தியலுமில்லை. உணர்வுமில்லை வெறுமனே வாய்ச்சவடால்களும் தேர்தல்கால உணர்ச்சிபூர்வ அரசியல் கலாசாரமும்தான் இருக்கிறது”**

கப்படுகின்றது. தேர்தல்களில் வெல்வதற்காக தமிழ்த் தேசியத்திற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்பது அங்கு சிங்கள பௌத்த தேசியவாதத்தினுடைய அரசியல் அரிச்சுவடியாக இருப்பதனால் அது எங்களைப் பாதிக்கின்றது. அவர்கள் காலத்துக்கு காலம் திருத்தம், அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்ற பேசுவார்கள். தீர்வுப் பொதி என்று பேசுவார்கள் கடைசி நேரத்திலே எங்களை கைவிட்டு விடுவார்கள். இதற்கு முதலில் நாங்கள் தீர்வு கண்டாக வேண்டும்.

தேசிய அரசாங்கம் என்று சொல்லுகிறவர்கள் எந்த தார்மீக அடிப்படையில் தங்களை தேசிய அரசாங்கமென்று அறிவித்தார்கள் என்று எனக்கு புரியவில்லை. இலங்கையின் ஜனநாயக வரலாற்றில் முதன்முறையாக உத்தியோகபூர்வ எதிர்கட்சி, உத்தியோகபூர்வமற்ற எதிர்க் கட்சி ஆகியவை ஒரே பாராளுமன்றத்தில் இருக்கின்ற வரலாற்று நிகழ்வு இதுதான். உத்தியோகபூர்வ எதிர்கட்சி தமிழ்த் தேசியத்தின் தலைமையாக இருந்தும் கூட இந்த பொன்னான வரலாற்றுத் தருணத்தில் பாராளுமன்றத்தில் வாதத்திற்கு உட்படுத்த வேண்டிய அநேக விடயங்களை எதிர்க்கட்சித் தலைவர் நிறைவேற்றவில்லை என்பதையும் தமிழ் முஸ்லிம் தரப்பு சார்பாக நான் பகிரங்க குற்றச்சாட்டாக முன்வைக்க விரும்புகிறேன்.

அண்மையில் பௌத்த தேசியவாதிகளால் முஸ்லிம்களுடைய இருப்பு வடக்கு–கிழக்கிலும், வடக்கு–கிழக்கிற்கு வெளியிலும் கேள்விக்குட்படுத்தப்பட்ட பொழுது ஆகக் குறைந்தது பாதுகாப்பு அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வரவேண்டிய பொறுப்பினை எதிர்க்கட்சித்தலைவர் கொண்டிருந்தார். ஒரு தெளிவான அரசியல் வாதத்தினை முன்வைக்கத் தெரியாத தமிழ்த்தேசியத் தரப்பினரும், முஸ்லிம் தேசியத் தரப்பினரும் பாராளுமன்றத்தில் இருப்பது என்பது வரலாற்றில் ஒருபோதும் நிகழாத சாபக்கேடு என்பதை இங்கு நான் பதிவு செய்து கொள்ள விரும்புகின்றேன்.

இவ்வாறாக குற்றம் சாட்டுவது என்பதைத் தாண்டி எங்களுடைய கருத்தியல், எங்களுடைய அரசியல், எங்களுடைய இருப்பு, எங்களுடைய வரலாறு, எங்களுடைய பூர்வீகம் இவற்றையெல்லாம் புரிந்து கொள்கிற அடுத்த சந்ததி இன்னும் எவ்வாறு வந்துவிடப் போகிறது என்ற அங்கலாய்ப்பு எங்களுக்கு இருக்கிறது. என்னுடைய தந்தையார் காலத்திலிருந்து தமிழ் முஸ்லிம் உறவும் என்னுடைய காலத்திலிருந்த தமிழ் முஸ்லிம் உறவும் என்னுடைய பிள்ளைகள் காலத்தில் வரப்போகின்ற தமிழ் முஸ்லிம் உறவும் ஒரே நேர் கோட்டுப்பாதையில் பயணிப்பதற்கு நாங்கள் மிகத் தெளிவான நீண்டகால செயற்பாட்டுடன் கூடிய பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்பதை தமிழ்த் தரப்பிடம் மிக வினயமாக வேண்டிக் கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக இலங்கையில் குறிப்பாக வடக்கு–கிழக்கிலே ஒரு சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்பதை நோக்கி தமிழ் தேசியம் தொடர்ந்தும் பேசிக்கொண்டு வருகிற போது முஸ்லிம் தேசியம் தமிழ் தேசியத்தின் சமஷ்டிக்கு எதிரானது என்கின்ற பரப்புரை மிகப் பிழையானது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் முஸ்லிம் தேசியம் அதனுடைய கருத்தியல் கோட்பாட்டை 1989ஆம் ஆண்டு தனித்துவ அரசியலில் மறைந்த தலைவர் அஷ்ரப் அவர்களின் தலைமையில் முன்வைத்தது. 1994ஆம் ஆண்டு அமைச்சரவையில் ஒரு பொறுப்பு வாய்ந்த அமைச்சராக அவர் மாறிய பொழுது அதனுடைய நேர்கோடு சிதைக்கப்படுகிறது. அதற்குப் பின்னர் இன்றைய முஸ்லிம் காங்கிரசினுடைய தலைவர் வந்ததன் பிற்பாடு முஸ்லிம் தேசியம் என்கின்ற கருத்தியலுக்கு உரம் போடுகிற எந்த திராணியும் இல்லாமல் இருக்கின்றார். அந்த கருத்தியலுக்கு உள்ளீடுகளை வடக்கு–கிழக்கு தாயகத்தில் இருக்கின்ற மண்ணின் மைந்தர்களிடம் பெற்றுக்கொள்ளாமல் அவர்களை அச்சுறுத்தலாகப் பார்க்கின்ற ஒரு சாபக்கேடும் நிலவுகிறது. இதனால் இந்த முஸ்லிம்கள் சமஷ்டி சார்பாக என்ன நினைக்கிறார்கள் என்பதை தமிழ் தரப்புக்கு சொல்லுவதில் சில சங்கடங்கள் இருப்பதாக நான் நினைக்கிறேன்.

அஷ்ரப் அவர்கள் என்னுடைய பிறந்த ஊராகிய நிந்தவூரில் 1991ஆம் ஆண்டு ஒரு பொதுக்கூட்டதில் கலந்து கொள்ள வருகிறார். நான் இதை பல மேடைகளில் சொல்லியிருக்கிறேன். அந்தக் கூட்டத்திலே அன்று இருந்த முன்னாள் அமைச்சர் எம்.எம். முஸ்தபா அவர்களை தனது கட்சியில் உள்ளீர்ப்பதற்காக அவர்ஒரு உத்தியை கையாளுகிறார். முஸ்லிம்களுக்கு சமஷ்டி ஆட்சி வேண்டும் என்று குரல் கொடுத்த மைந்தனைப் பெற்ற மண் இந்த நிந்தவூர் மண் என்று அஷ்ரப் குறிப்பிடுகின்றார். ஒரு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தலைவரையும் முஸ்லிம் சமஷ்டியைப் பற்றிப் பேசிய இன்னொரு தலைவரையும் நான் பத்து அல்லது பதினொரு வயதாக இருந்த பொழுது அறிந்து கொண்டேன். ஏற்கனவே நான் கூறிய திருமலைத் தீர்மானத்தின் போது முஸ்லிம் தரப்பினரிடம் அபிப்பிராயம் கேட்கப்பட்டது. அப்பொழுது தான் முஸ்லிம் சமஷ்டி என்கின்ற விவகாரம் தோற்றம் பெற்றிருக்கின்றது. இன்று முஸ்லிம் சமஷ்டி பற்றி பேசுகிற அரசியல் தலைவர்களும் புத்திஜீவிகளும் இல்லாமல் இல்லை. ஆனால் எங்களுக்கிடையே தோற்றம் பெற்றிருக்கின்ற ஐயப்பாடுகளும் ஒரு பொறிமுறையில்லாத விரிசல்களைச் சந்திக்கின்ற இரண்டு சமூகங்களாக இருக்கின்ற காரணத்தாலும் இதனுடைய தெளிவான கருத்தியல் வாதங்கள் முன் வைக்கப்படுவதில்லை. அதுவரை ஒன்றை மாத்திரம் நான் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

வடக்கு – கிழக்கு இணைக்கப்படுகிற பொழுது முஸ்லிம்களுக்கான தென்கிழக்கு அலகினுடைய தலைநகரமாக கல்முனையை மையப்படுத்திய சூழல் அமைய வேண்டுமென்று ஏற்கனவே முஸ்லிம் தேசியமும் தமிழ்தேசியமும் இணக்கப்பாடு கண்டுள்ளன. அதன் பிற்பாடும் இன்று பிரதேச சபைகளை பிரித்துக் கொள்வதில் முஸ்லிம்களுக்கிடையே பிரதேசவாத ரீதியில் அடிபாடுகளும், கல்முனை பிராந்தியத்தில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையேயான அடிபாடுகளும் தற்பொழுது ஆரம்பம் பெற்றிருக்கின்றன. இதில் மிகவும் தெளிவான நிலைப்பாடுகளை எடுக்க வேண்டிய தேவைப்பாடு வடக்கு மக்களுக்கு இருக்கின்றது. இது இரு இனங்களுக்கிடையில் முரண்பாடுகளையும் முஸ்லிம் இனத்துக்குள் விரிசல்களையும் ஏற்படுத்தி எங்களுடைய அதிகார பரவலாக்கத்திற்கான போராட்டத்தை திசை திருப்புவதற்கான ஒரு சிங்களதேசியவாத நிகழ்ச்சி நிரலாகவே நான் பார்க்கிறேன்.

இவ்வாறான விவகாரங்களில்தான் முஸ்லிம் தரப்பின் அரசியல் பிழைகளை ஒரு தமிழ் பேசும் தாயக கோட்பாட்டின் மொழியாடலுக்குள் பரிந்துரை செய்ய வேண்டிய தேவைப்பாடுகள் எழுகிறது. குறிப்பாக வடக்கு–கிழக்கு இணைப்பு என்கின்ற விவகாரம் வருகின்ற பொழுது ஆரம்பத்தில் நாங்கள் செய்து முடிக்க வேண்டிய சில வேலைகள் இருக்கின்றன. ஏற்கனவே கூறியது போல் வடக்கும் கிழக்கும் பேச வேண்டும். தமிழ்தரப்பும் முஸ்லிம் தரப்பும் பேச வேண்டும். அதற்கு முதல் அந்த பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது சிவில் நிர்வாக ரீதியாக எங்களுடைய அயல் கிராமங்களுக்கிடையே காணப்படுகின்ற விரிசல்களை ஒவ்வொரு பிராந்தியம் பிராந்தியமாக நாங்கள் களைந்து கொள்ள வேண்டும். இந்த விரிசல்கள் எங்களுடைய போராட்டத்தை சிதைக்கின்ற ஒரு விரிசலாக தொடர்ந்தும் இடம்பெற்று விடக்கூடாது. ஆகவே நாங்கள் இரண்டு மாகாணங்களை இரண்டு மாநிலங்களை இணைக்க வேண்டுமென்று பேசுகின்ற பொழுது எங்களுடைய அயல் கிராமங்களுக்கிடையில் ஒற்றுமை காண வேண்டும். ஒற்றுமை காண முடியாமல் உடன்பாடு காணமுடியாமல் பல தசாப்தங்களை கடந்து போவோமாக இருந்தால் இது தொடர்ந்தும் சாத்தியமற்ற ஒரு விடயமாகப் போவற்கு வாய்ப்பிருக்கிறது.

அதே போன்று முஸ்லிம்கள் மீது இன்று திட்டமிட்ட ரீதியில் தொடுக்கப்படும் சதிகளை முறியடிக்க வேண்டும். குறிப்பாக சொல்லுவதாக இருந்தால் அளுத்தகமை கலவரம் என்பது இந்த அரசாங்கத்தை மாற்றுவதற்காக உருவாக்கப்பட்ட சர்வதேச சதி. முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக குறிப்பிட்டிருந்தார். மகிந்த ராஜபக்ஷ அவர்களை ஆட்சியில் இருந்து நீக்குவதற்கு பல சர்வதேச அரசியல் சதிகள் இருந்தன. அதற்காக அவர் புனிதமானவர் என்று சொல்வது எனது கருத்தல்ல. அதற்குப் பின்னர் முஸ்லிம் தனியார் சட்டத்தை புதிய அரசாங்கம் வந்த வரத்திலேயே கேள்விக்கு உட்படுத்தியிருந்தது. அதற்குப் பின்னாலுள்ள காரணம் என்னவென்றால் முஸ்லிம் தரப்பிலிருந்து ஒரு வகையான உணர்ச்சிமயமாக்கப்பட்ட ஒரு இளைஞர் சமுதாயத்தை உந்துவது. அதற்கு அடுத்த கட்டம் அவர்களை தீவிரவாதிகளாக முத்திரை குத்துவது. வடக்கு கிழக்கில் குறிப்பாக முஸ்லிம்களை தீவிரவாதிகளாக முத்திரை குத்துகின்ற ஒரு கலாசாரம் பிராந்திய சர்வதேச நிகழ்ச்சி நிரலோடு இணைந்து இடம்பெறுமாக இருந்தால் அது ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களினுடைய இருப்பை கேள்விக்குட்படுத்தும். ஆகவே இந்தச் சதி திட்டமிட்ட வகையில் இந்த தேசத்தில் இடம்பெறுகின்றது. இது பல்வேறு சர்வதேச அரசியலோடு சம்பந்தப்பட்டிருக்கின்றது. ஆகவே தமிழ் முஸ்லிம் தரப்பு நிதானமாகவும் பொறுப்புணர்ச்சியோடும் நடந்து கொள்ள வேண்டும். அதற்காக எங்களாலான அனைத்து ஒத்துழைப்புக்களையும் நல்க தயாராக இருக்கிறோம்.

**நிமிர்வு இதழ் தொடர்பிலான தங்களின் காத்திரமான விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் எங்களுக்கு எழுதி அனுப்பலாம். மேலும், வேறெங்கும் பிரசுரமாகாத தங்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாடு சார்ந்த கட்டுரைகளையும் அனுப்பி வைக்கலாம். தரமானவை பிரசுரிக்கப்படும்.**

**–ஆசிரியர்–**

**நிமிர்வு வாசகர்களே**

**தொடர்புகளுக்கு...**

**தபால் முகவரி:**
**தமிழ் ஊடகத் திரட்டு,**
**லக்சுமி கட்டிடம்,**
**ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,**
**கல்வியங்காடு,**
**யாழ்ப்பாணம்**

மின்னஞ்சல் முகவரி: nimirvueditor@gmail.com
தொலைபேசி இல : 021 223 2121





# தாரா வளர்ப்பில் சாதிக்கும் இளம்பெண்

– தீசன் –

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பை சேர்ந்த இளம் பெண்ணான ஸ்ராலினி ராஜேந்திரம் இன்று ஒரு வெற்றி கரமான தொழில் முயற்சியாளராக விளங்குகிறார். இதன்மூலம் எம் பெண்களுக்கே ஒரு முன்மாதிரியாக இருக்கிறார். வியாபார முகாமைத்துவம் படித்துள்ள இவர் இன்று சுவடிகள் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஆக பணியாற்றுகிறார். அதேவேளை, சீர் பயோ (Seer Bio) என்கிற நிறுவனத்தை நிறுவி அதனூடாக தாரா வளர்ப்பை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகிறார்.

**இன்று 300 க்கும் மேற்பட்ட தாராக்களை வளர்ந்து வரும் ஸ்ராலினியுடன் பேசிய போது,**

2016 ஆம் ஆண்டு சித்திரை மாதம் மலேசியப் பயணத்தின் போது தான் என் தொழில் முயற்சிக்கான முதல் விதை நாட்டப்பட்டது. அங்கு பல புதிய வர்த்தக முயற்சிகள் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது. வெற்றிகரமான முதலீட்டாளர்களையும் சந்திக்க சந்தர்ப்பம் கிடைத்தது. இங்கே எப்படி பரவலாக கோழி இறைச்சி விற்கப்படுகிறதோ அதே போல் அங்கே உள்ள பெரும்பாலான கடைகளில் தாரா இறைச்சி விற்கப்படுகிறது. தாரா இறைச்சியின் சுவையும், போசணைப் பெறுமானமும் நன்றாகவே இருந்தன. தாரா இறைச்சி ஏன் எங்கள் பகுதிகளில் இல்லை என எனக்குள்ளே கேள்வி தோன்றியது. அதனை ஏன் சிறு தொழில் முயற்சியாக ஆரம்பிக்கக் கூடாது என்று யோசித்தேன்.

எனக்கு சுவடிகள் நிறுவனத்தை சேர்ந்த வைத்தியர்களான நடராஜா பிரபுவும், கணேசமூர்த்தி ஸ்ரீபவனும் சரியான தொரு வழிகாட்டிகளாக இருந்தார்கள். அவர்களின் ஆலோசனையின் பேரில் 2016 ஆனி மாதம் ஐந்து சோடி தாராக்களுடன் தாராப் பண்ணையை கொக்குவில் பொற்பதி பிரதேசத்தில் ஆரம்பித்தேன். எனக்கு இந்த தொழில் முயற்சி பெரும் சவால் நிறைந்ததாகவும் இருந்தது. ஏனெனில், எமது மக்கள் தாரா இறைச்சி, முட்டைகளை பெரும்பாலும் உணவுத் தேவைக்கு பயன்படுத்தாத சூழலே இருந்தது. மக்களுக்கு தாரா இறைச்சி மற்றும் முட்டை நல்ல போசனைப் பெறுமானங்கள் நிறைந்தது என விழிப்பூட்ட துண்டுப் பிரசுரங்கள் மூலம் முயற்சித்தோம். அது நல்ல பலனை அளித்தது. கிட்டு பூங்காவில் நடந்த சிறுகைத்தொழில் கண்காட்சியிலும் காட்சிக் கூடமொன்றை அமைத்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்ட முடிந்தது.

இப்போது ஓரளவு தாரா இறைச்சி நுகர்வு எம் மக்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது. தாரா முட்டைகளை அழகு சாதன தேவைக்காக இங்கே அதிகம் பயன்படுத்துகிறார்கள். பொதுவாக தாராக்கள் குறித்து எம்மக்களிடையே சில கருத்துக்கள் உண்டு. ஒன்று, தாரா முட்டை சரியான வெடுக்கு என்று சொல்வார்கள். அவர்கள் சொல்கிற அளவுக்கு தாரா முட்டை வெடுக்கு கிடையாது.

இரண்டாவது, தாராக்கள் வளர்ப்பதற்கு குளம் அல்லது நீர்நிலை ஒன்று கட்டாயம் இருக்க வேண்டும் என்பது. நான் கோழிக் கூடுகள் போன்ற நிலக் கூடுகளுக்குள் வைத்து தான் கடந்த ஒன்றரை வருடங்களாக தாரா வளர்த்து வருகிறேன். எந்த பிரச்சினையும் இல்லாமல் வளர்ந்து வருகிறது. நீர்நிலை அவசியமல்ல. இருந்தால் நல்லது.

மூன்றாவது தாராக்களுக்கு சாப்பாட்டு செலவு கூடுதலாக இருக்கும் என்பது. நான் பெரிதாக எந்த செலவும் இல்லாமல் தான் தாரா வளர்த்து வருகிறேன். மூன்று திருமண மண்டபங்களிலும் சில உணவகங்களிலும் வீணாகும் சாப்பாடுகளை வாங்கி வந்து தாராக்களுக்கு உணவாக கொடுக்கின்றேன். இது தவிர அசோலாக்களையும், மண்புழுக்களையும் வளர்த்து தாராக்களுக்கு உணவாக்கி வருகிறேன்.

தாராக்களை மூன்று நிலைகளில் விற்பனை செய்து வருகிறேன். தாராக் குஞ்சு ஒரு சோடி 450 ரூபாய்க்கும், 3 மாதம் நிரம்பிய தாராக்கள்

ஒரு சோடி – 1400 ரூபாய்க்கும், பெரிய தாராக்கள் 3500 ரூபாய்க்கும் விற்று வருகிறேன். என் போன்ற தாரா வளர்க்கும் ஆர்வமுள்ளவர்களுக்கு தாரா வளர்ப்பு முறைகளை சொல்லிக் கொடுக்கவும் ஆர்வமாக இருக் கிறேன். ஏற்கனவே சில இடங்களில் என்னிடம் தாரா வாங்கி வளர்ப்பை சிலர் ஆரம்பித்துள்ளனர். அவர்களுக் கும் சந்தை வாய்ப்பை நானே ஏற்படுத்திக் கொடுக்கிறேன்.

தாரா வளர்ப்பு மட்டுமல்ல தாரா முட்டை மா என்கிற சத்து மாவையும் உற்பத்தி செய்து வருகிறேன். வல்லாரையும் வளர்த்து விற்பனை செய்து வருகிறேன். அத்தோடு கத்தாழை நாற்றுக்களையும் விற்பனை செய்கிறேன். முருங்கை கன்றுகளை வளர்க்கும் நோக்கமும் எதிர்காலத்தில் இருக்கிறது. இவையெல்லா வற்றையும் தாண்டி சுவடி அமைப்பின் கல்வி நிறுவனமூடாக சின்னம் சிறார்களுக்கு ஆங்கில மொழியையும் கற்பித்து வருகிறேன். என்றார்.

இன்று வேலையில்லா பட்டதாரிகள் பலர் அரசாங்க வேலைக்கு மட்டுமே விண்ணப்பித்துவிட்டு காத்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் முற்றுமுழுதாக தன் உழைப்பை நம்பி புதிய முயற்சிகளை செய்யும் இளை யோரை ஊக்குவிக்க வேண்டியது அனைவரதும் கடமை யாகும். வறுமையான தச்சுத் தொழிலாளியின் குடும் பத்தில் பிறந்த ஸ்ராலினி இன்று 24 வயதிலேயே இந்த நிலைக்கு முன்னேறி இருப்பது ஏனையவர்களுக்கும் ஒரு சிறந்த முன்னுதாரணமாகும்.

**தொடர்புகளுக்கு :- 0779866409, 0768384466**

## வீட்டுக் கழிவுகளிலிருந்து கைநிறைய வருமானம் பெற உகந்த தாரா வளர்ப்பு

இந்திய ஓடியின வாத்துக்கள் அளவிற் சிறியவையாகினும் வருடத்தில் 280 வரையான முட்டைகளை இடக்கூடியவை. மேலும் இவற்றினால் சிறிதும் பறக்க முடியாது என்பதால் கூடுகள் தேவையில்லை. வெட்டவெளியில் வளர்க்க ஏற்றவை. சிறிய இடத்தில் பலநூறு வாத்துக்களை வளர்க்க விரும்பினால் இவ்வினமே சிறந்தது. ஆயிரக்கணக்கான வாத்துக்களைத் தனிஒருவரே பராமரிக்கலாம்.

காய்கறிகளின் தோற்பகுதிகள், வெட்டிக் கழிக்கப்பட்ட மாமிசப் பகுதிகள் என சகலதும் சமையற்கழிவுகளே ஆகும். உண்ணாமல் மீதம் விடப்பட்ட உணவு முதல் வீட்டில் அன்றாடம் உருவாகும் தினசரிச் சமையற்கழிவுகளை பயனுள்ள முறையில் பயன்படுத்துவது பற்றி நாம் அனைவரும் சிந்திக்க வேண்டிய நேரம் இது. ஐந்துபேர் கொண்ட குடும்பத்திற்கான சமையலிலேயே பெருமளவு சமையற்கழிவுகள் உருவாகும். இவற்றினைச் சரியான முறையில் அப்புறப்படுத்தாவிட்டால் துர்நாற்றம் ஏற்படுவது முதற்கொண்டு இன்னோரன்ன பிரச்சினைகளை உருவாக்கும். ஒரு வீட்டின் நிலையே இது என்றால் பல நூற்றுக்கணக்கானவர்களிற்கென சமையல் செய்யும் உணவகங்கள் இக் கழிவுகளைக் கையாள்வதில் எவ்வளவு சிக்கல்களை எதிர்கொள்ளும் என புரிந்துகொள்ளலாம். பல உணவ கங்கள் சீல் செய்யப்படவும் சட்டப்பிரச்சினைகளைச் சந்திக்கவும் உணவுக்கழிவுகளை முறையாகக் கையாளாமையே காரணமாகும்.

கழிவுகளைக் கையாள்தலை ஒரு கைநிறைய வருமானம் தரும் தொழிலாக மாற்றினால் நிலமை தலை கீழாகும். கழிவுகளுக்கு அதிக மவுசு உருவாகும். அதே நேரம் சுற்றுப்புறச் சூழல் தூய்மையாகப் பேணப்படும். நவீன சேதனக் கழிவு முகாமைத்துவ முறைகள் இதனைச் சாத்தியப்படுத்துகின்றன. இத் திட்டத்தின் அச்சாணியாக தாரா வளர்ப்பு அமைகிறது. தாராக்கள் சமையற்கழிவுகளை மட்டும் உணவாகக் உட்கொண்டு உயிர்வாழக்கூடியவை. காசு செலவு செய்து கடையில் மாஸ் வாங்கி செலவை கூட்ட வேண்டியதில்லை. இரண்டு பேர் கொண்ட குடும் பத்தின் சமையற்கழிவுகளில் இருந்து ஆறு தாராக்கள் வளர்க்க முடியும். இதில் ஐந்து தாராக்கள் பேடாகவும் ஒன்று ஆண்தாராகவும் அமையும். ஒரு பேடு சுமார் 280 முட்டைகளை வருடம் ஒன்றிற்கு இடுகிறது. ஒரு முட்டை ரூபா 30 வரை விற்கலாம் எனில் எவ்வளவு வருமானம் ஈட்டலாம் என்பதனை யோசித்து பாருங்கள்.

வீட்டின் அருகில் உள்ள உணவகத்தில் இருந்து சமையற்கழிவு மற்றும் உணவுமீதிகளைப் பெறமுடியும் எனின் இன்னும் அதிகளவு தாராக்களை உங்களால் வளர்க்க முடியும். தாராக்கள் மனிதர்களுடன் செல்லப்பிராணி போல் பழகக்கூடியவை. தாராக்களின் கழிவுகளில் இருந்து நாற்றம் உருவாகாது. அதை உடனடியாகவே வீட்டுத் தோட்டப் பசளையாகப் பயன்படுத்தமுடியும். நிழலான இடத்தில் இயல்பாக வசிக்கக்கூடியது. நோய்த்தாக்கம் வெகுகுறைவு. தடுப்புமருந்துகள், ஊட்டமருந்துகளிற்கு என்று செலவேதுமில்லை. மழை, குளிர், அதிக வெப்பம் போன்ற காலநிலையால் தாராக்கள் பாதிக்கப்படுவதில்லை. தாராக்கள் வளர்க்க குளம் தேவை என்பது தவறான எண்ணம். அவற்றின் அலகுகளை நனைக்கக்கூடிய அளவிற்குப் பாத்திரத்தில் நீர் எந்நேரமும் இருந்ததால் போது மானது. ஆரம்ப முதலீடும் குறைவு. மாதச்செலவினமோ பூச்சியம். தினசரி காலை, மாலை 10 நிமிடங்கள் இதற்கென ஒதுக்கினாற் போதுமானது. மனநிறைவான வருமானம் மாதாந்தம் நிச்சயம் கிடைக்கும்.

# சிறார் வதை

நிமிர்வுகள் – 5

நெம்பு

## அப்புக்காத்தரும்... அன்னமாக்காவும்...


என்ன மாதிரியாம் இந்தமுறை உந்த ஐந்தாமாண்டுச் சோதனை முடிவுகள்..?


அதுக்கென்ன.. அது பரவாயில்லாம வந்திருக்குது போல...


என்ன பரவாயில்லாமலோ...? கனக்கப் பெற்றார் வெளியில திரிய வெக்கப்பட்டுக் கொண்டு வீட்டுக்குள்ளேயே இருக்கினம் போல கிடக்குது...


இது என்ன அவ்வளவு பெரிய விசயமே... ?


பின்ன...இப்பவே இப்படிக் குறைஞ்சா... எப்படி வளர்ந்து நல்லாப் படிக்கப் போகுதுகள்..


பிள்ளைகளை முதலில சும்மா வளர விடுங்கோவன்...
பிறகு அதுகள் தன்ரபாட்டில படிப்பினம்..


சும்மா விடுறதோ, பிள்ளைகளை... நல்ல கதை. பெரிய சேரிட்ட கிளாசுக்கு விடவேணும்...


ஓ... அப்படியே..


இப்ப ஆண்டு மூன்று தொடக்கம் பிள்ளைகளை அங்கே விடோணும்...


என்னது... மூன்றாம் ஆண்டு தொடக்கமோ...அப்ப மூன்று வருஷம்... A/L படிப்பு மாதிரியெண்டு சொல்லுங்கோ... எட்டு வயசிலேயே படிக்கத் தொடங்கிறதோ?


இல்லை.. அதுக்கு முதலே.. மூன்று வயசிலேயே எழுத்துப் பழக ரியூசனுக்கு விடவேணும்..


மெய்யாவோ...? மூன்று வயசில அதுகளுக்கு முறையாக் கதைக்கவே தெரியாமலெல்லோ இருக்குங்கள்...


கதைக்கத் தெரியாட்டியென்ன...எழுத்தறிவு முக்கியம்..


ஓம்..அதெண்டாச் சரிதான்.. மூளையைப் பாவிக் காத எழுத்தறிவுச் சமூகத்தைத் தான் நாங்கள் கட்டி யெழுப்பிக் கொண்டிருக்கிறம்..


ஏன் இப்படிச் சொல்லுறீங்கள்...


பெரிய படிப்பெல்லாம் படிச்சு, நிறைய சோதனை களெல்லாம் பாஸ் பண்ணி, பெரிய பதவிகளில இருக்கிற எத்தனை பேர் தங்கட தாய்மொழில சொந்தமாய் நாலு வசனம் எழுதத் தெரியாம இருக்கினம்..


அப்புக்காத்தர்: என்ன அப்படியோ..


உப்பிடியே உந்த சின்னனுகளை போட்டு வதைச்சுக் கொண்டிருந்தா, எதிர்காலம் இன்னும் நாசமாய் போய்விடும்...

### கனவு வசப்படட்டும்

பட்டாம் பூச்சிகளின் உலகத்தை
உங்களின்
கைப்பிடிக்குள் சிறைப்பிடித்தவர்களே...
சின்னக் கனவுகள்,
சிறகு விரிக்க முன்பு
பறக்கத் தடைபோட்டவர்களே...

சற்றுச் சிந்தியுங்கள்...
நாங்கள் பிரதியெடுக்கும் இயந்திரங்களையா
அல்லது மனிதர்களையா
வளர்த்தெடுக்கின்றோம் என்று...

உங்களுக்குப் பேர் வரவேண்டி,
பெயரளவிலான சமூகத்தையா
கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறீர்கள்...?
கனவும் கற்பனையும் காய்ந்துபோன,
புதிய சிந்தனைகள் தொலைந்துபோன,
வருங்காலத்தையா வரவேற்கின்றோம்...?

முடியுமான அளவிற்கு,
முயற்சிக்க ஊக்குவியுங்கள்...
பாடப் படிப்பிற்கு அப்பாலும்,
கற்றுக்கொள்ளப் பழக்குங்கள்...
தங்களின் கைகளால்
அவர்களின் வாழ்க்கையைக்
கட்டியெழுப்ப அனுமதியுங்கள்...

இரசிக்கும் மனதும்,
இனிக்கும் வாழ்வும்,
என்றென்றும் வசப்படும்...

## மலையகத் தேசியம்



# அச்சுறுத்தலை நோக்கி மலையகத் தமிழரின் பொருளாதாரம்

வோல்டர் டெரி

மலையகத் தமிழரின் பிரதான பொருளாதார வளமானது பெருந்தோட்டத்துறை ஆகும். அப்பெருந் தோட்டத்துறையின் வளர்ச்சிக்காக அம்மக்கள் அனுபவித்த மாபெரும் துயரங்களையும் மகத்தான தியாகங்களையும் சென்ற இதழில் பார்த்தோம். இன்று அவர்களின் பிரதான பொருளாதார வளமான பெருந்தோட்டத்துறையானது மிகவும் திட்டமிட்ட முறையில் மலையகமக்களின் கையிலிருந்து பிடுங்கப்பட்டு வருவதை அவதானிக்கலாம். அதனூடாக மலையக தேசிய இனத்தின் இருப்பை ஆட்டம் காணச் செய்வதற்காக நீண்டகால திட்டமிடல்கள் இடம்பெற்று வருகின்றன. ஒரு தேசிய இனமாக அவர் களைத் தாங்கிப் பிடிக்கும் ஒரு முக்கியதூணை அவர் களின் கால்களின் கீழே வெட்டியெறியும் நடவடிக்கைகளை அடுத்தடுத்து பதவிக்குவந்த பெருந்தேசிய அரசாங்கங்கள் மேற்கொள்கின்றன. இதன் மூலம் மலையகத் தமிழர் என்ற தேசிய இனத்தை இலங்கைத்தீவிலிருந்து ஒழித்து விட லாமென அவை எண்ணுகின்றன. அவற்றுக்கான திட்ட மிடல்களும் நடைமுறைப்படுத்தல்களும் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன என்பதை இந்த இதழில் பார்ப்போம்.

1904ஆம் ஆண்டில் இலங்கையில் மொத்தமாக 1320 தோட்டங்கள் இருந்துள்ளன. இவை படிப்படியாக குறைந்து முறையே 1980இல் 668ஆகவும்,1992இல் 506ஆகவும் (தோட்டங்கள் மீளவும் தனியார் மயப்படுத் தப்பட்ட வருடம்) 2013இல் 427ஆகவும் காணப்படு கின்றது. இது போன்றே பெருந்தோட்டத்துறையின் ஆளணியானது 1981இல் 497,995 ஆகவும், 1992 இல் 376,498 ஆகவும் 2013இல் 193,412 ஆகவும் குறைந்து செல்லும் ஒரு போக்கை காணலாம்.

மலையகத் தமிழரின் பொருளாதாரமானது மிகவும் திட்டமிட்ட முறையில் ஆட்சியாளர்களினால் பறிக் கப்பட்டு வருவதற்கு மேலே உள்ள புள்ளி விபரம் சிறந்த எடுத்துக்காட்டாகும். மேலும் 1948,1949 காலப்பகுதியில் மலையகத் தமிழரின் குடியுரிமை இவ்வாறு திட்டமிட்ட வகையில் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தினால் சட்டங்கள் மூலம் பறிக்கப்பட்டதோ அவ்வாறே, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான ஆட்சி காலத்தில் (1970–1977) மலையக மக்களின் பொருளாதார நிலம் பறிக்கப் பட்டது.

1972ஆம் ஆண்டின் 1ம் இலக்க நிலச்சீர்திருத்தச் சட்டம் (இதன் பிரகாரம் நிலச்சீர்திருத்த ஆணைக்குழு அமைக்கப்பட்டு தனியார் காணி உரிமைக்கு உச்ச வரம்பு கொண்டு வரப்பட்டது. 18வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு பெருந்தோட்ட காணி ஆயின் 50ஏக்கர் எனவும், மற்றைய நிலமாயின் 25 ஏக்கர் எனவும் உச்ச வரம்பு நிர்ணயிக் கப்பட்டது) 1950 ஆம் ஆண்டின் நிலச் சுவீகரிப்புச் சட்டம், 1972 ஆம் ஆண்டின் 2ம் இலக்க பெருந்தோட்டச் சட்டம், 1972 ஆம் ஆண்டின் நாட்டின் விவசாய கூட்டுத் தாபனச் சட்டம் 1973ஆம் ஆண்டின் 42ம் இலக்க விவசாய நிலச்சட்டம் 1975ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட நிலச்சீர் திருத்தச் சட்டம் ஆகிய சட்டங்களை பயன்படுத் தியே அப்போதைய அரசாங்கம் நிலச்சுவீகரிப்பை நடைமுறைப்படுத்தியது.

இதன் பிரகாரம் 166,405 ஹெக்டேயர் தேயிலை நிலங்கள் உள்ளடங்கலாக மொத்தமாக 419,101 ஹெக்டேயர் நிலம் அரசாங்கத்தின் பொறுப்பில் கொண்டுவரப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட பெருந்தோட்டப் பயிர் நிலங்கள் 230.000ஹெக்டேயர் மூன்று பொதுத் துறை நிறுவனங்களின் நிருவாகத்திலும் 105.00 ஹெக்டேயர் நிலம் வேறுபட்ட கூட்டுறவு நிறுவனங்களின் நிருவாகத்திலும் விடப்பட்டது. மேலும் 45.000 ஹெக் டேயர் நிலமற்ற விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

1977பொதுத்தேர்தலின் பின்னர் பொதுத்துறை நிறுவனம் வாபஸ் பெறப்பட்டதுடன், கூட்டுறவு நிறுவனங்களும் நீக்கப்பட்டன. இலங்கை அரச பெருந் தோட்ட கூட்டுத்தாபனமும் (SriLanka state Plantation Corporation-SLSPC) மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையும் (Janatha Estate Development Board-

JEDGB) தொடர்ந்து பொதுத்துறை சார்ந்த பெருந் தோட்டங்களை நிருவாகம் செய்தன. பொதுத்துறை சார்ந்த பெருந்தோட்டங்களின் நிருவாகம் 1992இல் மீண்டும் 23 பிராந்திய தனியார் நிறுவனங்களிடம் ஒப் படைக்கப்பட்டன.

1930–1987 வரை 57 வருடங்களில் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொண்டு 105 ஆற்று வடிநில அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் 2இலட்சத்து 50ஆயிரம் ஏக்கர் நிலம் ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்பட்டது. 1980களில் மகாவலி அபிவி ருத்தித் திட்டத்தின் கீழும் 55ஆயிரம் குடும்பங்களுக்கு 165.00ஏக்கர் நிலம் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. இந்த 4இலட்சத்து 15ஆயிரம் ஏக்கர் நிலத்தில் மலையகத் தமிழ் மக்களுக்கு எந்த ஒரு திட்டத்தின் கீழும் நிலம் வழங்கப் படவில்லை. அங்கும் இங்குமாக ஒரு சிலர் துண்டுக் காணியைப் பெற்றிருக்கலாம்.

இன்றைய நிலையில் பெருந்தோட்டத்துறை பொருளாதாரமானது திட்டமிட்ட பெரிய குடியேற்ற திட்டங்கள், முறையான பராமரிப்பின்மை, நகரகிராம மயப்படுத்தல், காடாக விட்டு பிரித்து கொடுத்தல் மீள் நடுகை இல்லாமை, தொழிற்சாலைகளை மூடுதல், வளங்கள் (மரங்கள், கற்கள்) சூறையாடப்படல், மாற்றுப் பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு போன்ற நடவடிக்கைகள் மூலம் திட்டமிட்ட வகையில் சிதைக்கப்படுகின்றன. மேலும் சிறு தோட்டத்துறை ஊக்குவிப்பு மூலமாக பெருந்தோட்டத்துறை பொருளாதாரமானது மலையக மக்களின் கைகளிலிருந்து பிடுங்கி எடுக்கப்படுகின்றது.

தென்னைச் செய்கையின் ஆதிக்கத்தை ஏற்கனவே இழந்துள்ள நிலையில் இறப்பர் துறையும் மலையக மக்களின் கைகளை விட்டு முழுமையாக பிடுங்கி எடுக்கப் படும் நிலையிலுள்ளது. இறப்பர் தோட்டங்களை பொறுத்த வரை களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை உள்ளிட்ட தென் மாவட்டங்களிலேயே அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. ஆனால் இன்று பெருமளவிலான இறப்பர் பயிர்ச் செய்கை நிலம் சகோதர சிங்கள இனத்தவர்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டு அல்லது அவர்களால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளதால் மலையகத் தமிழரின் தொழில் பாதிக்கப் பட்டு இன்று பெருமளவிலான தொழிலாளர்கள் தொழில் இழந்து அன்றாட வாழ்விற்காக போராடும் ஒரு நிலையே காணப்படுகின்றது. 2013ஆம் ஆண்டு தகவல்களின் படி இறப்பர் செய்கையானது 81,863ஹெக்டேயர் காணியில் சிறு உற்பத்தியாளர்களினால் செய்கை பண்ணப்படுகின்ற நிலையில் 48,917 ஹெக்டேயர் காணியிலேயே பெருந் தோட்ட நிறுவனங்களால் செய்கைப் பண்ணப்படுகின்றது.

இந்நிலையில் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமானதொரு விடயத்தையும் சுட்டி காட்டுதல் வேண்டும். அதாவது எந்தளவிற்கு தேயிலையை முதன் மைப்படுத்தி மலையகம் முன்னிறுத்தப்படுகின்றதோ அந்தளவு முக்கியத்துவம் இறப்பர் துறைக்கு கொடுக்கப் படுவதில்லை. இதன் விளைவு இன்று இறப்பர் பயிரி டப்படுகின்ற மலையக பிரதேசங்களில் வாழும் மலையகத் தமிழர்கள் தங்கள் அடையாளங்களை இழந்து சிங்கள பௌத்த இன தன்மையை ஏற்கும் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர்.

மலையகத் தமிழர்களின் நிலையிலிருந்து நோக்கு கின்ற போது அவர்களின் பிரதான பொருளாதார வள மான தேயிலை செய்கையை பொறுத்த வரையில் இன்று அத்துறை எதிர்நோக்கும் பிரதான சவால் சிறு தேயிலை காணிகளின் திட்டமிட்ட முறையிலான வளர்ச்சி ஆகும். பெருந்தோட்ட தேயிலை காணி திட்டமிட்ட முறையிலான சிறு உற்பத்தியாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதோடு, பெருந்தோட்டங்களின் வளர்ச்சிக்கென பெறப்படுகின்ற நிதி உதவிகள் அனைத்தும் சிறு உற்பத்தியாளர்களுக்கே கொடுக்கப்படுகின்றன. 2013ஆம் ஆண்டு தகவல்களின் படி இலங்கையில் தேயிலை பயிரிடப்படும் மொத்த நில பிரதேசமான 203, 020 ஹெக்டேயரிரில் 120,955 ஹெக்டேயர் சிறு உற்பத்தியாளர்களின் ஆதிக்கத்தில் இருக்கும் நிலையில் பெருந்தோட்ட நிறுவனங்களால் 82,065 ஹெக்டேயரில் மட்டுமே பயிரிடப்படுகின்றது. சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் எனும் போது 0.5 ஏக்கரிலிருந்து 50 ஏக்கர் வரையிலான நில பிரதேசத்தில் தேயிலை பயிர்ச் செய்கையினை மேற்கொள்வோரையே குறிக்கின்றது. இன்று இவ்வாறான உற்பத்தியாளர்களும் 4 இலட்சம் பேர் (2013ம் ஆண்டு தகவல்) என பெருந் தோட்ட கைத்தொழில் அமைச்சு மதிப்பிட்டுள்ளது. இச் சிறு உற்பத்தியாளர்களிடமும் மலையகத் தமிழர் தொழிலாளர் களாகவே உள்ளனர்.

மலையகத் தமிழர்களின் ஆதிக்கத்திலிருந்து பிடுங்கி எடுக்கப்பட்டு சிறு உற்பத்தியாளர்களிடம் கொடுக் கப்படும் இந்த தேயிலை காணியின் 90 வீதத்திற்கு மேற் பட்ட தேயிலை வளம் சகோதர சிங்கள இனத்தவர் களுக்கே கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு அனைத்து விதமான மானியங்களும், ஆலோசனைகளும், சந்தைப் படுத்தல் வசதிகளும் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டு ஊக்கு விக்கப்படுகின்றனர். இதற்கென சிறு தேயிலை உற்பத்தி யாளர் சங்கமும் அரசாங்கத்தினால் ஸ்தாபிக்க– ப்பட்டுள்ளது.

சிறு தேயிலை உற்பத்தியாளர்களின் இவ்வாறான திட்டமிட்ட வளர்ச்சியானது மலையகத் தமிழரின் கூட்டி ருப்பை சிதைப்பதனால் மலையகத் தேசியம் சவாலுக்கு உட்படுத்தப்படுகின்றது. மலையகத்தமிழர் கூட்டாக வாழும் நிலை சிதறடிக்கப்படுவதால் பொருளாதாரம் மட்டுமன்றி அவர்களின் வாழ்வாதார பிரதேசம் பறிக்கப்படுவதோடு

மொழி, கலாசார விழுமியங்களும் அச்சுறுத்தல்களை சந்திக்கின்றன. பொருளாதார வளமானது நேரடியாகவே பறிக்கப்படுகின்றது.

இந்நிலையானது தேசியத்தின் பிரதான கூறுகள் அனைத்தையும் பாதிப்பதால் ஒட்டுமொத்த மலையக தேசியமும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது. இவற்றுக்கு அப்பால் பெருந்தோட்டத்துறை மறைமுகமாகவும் அச்சுறுத் தப்படுகின்றது. பெரும்பாலான பெருந்தோட்ட நிறுவனங் கள் தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்குவதாக கணக்கறிக் கைகள் காட்டுகின்றன. ஆனால் இந்நிறுவனங்கள் அதை எவ்வாறு தந்திரமாக செய்கின்றன என்பதை யாரும் கவனிப்பதில்லை. பெரும்பாலும் அனைத்து நிறுவனங் களும் தங்களுக்கென தனியான சந்தைப்படுத்தல் நிறுவனங்களை வைத்துள்ளன. உற்பத்தி நிறுவனங்கள் நேரடியாக சந்தைப்படுத்தாமல் உற்பத்தி செலவுடன் குறைந்த இலாபத்துடன் தங்களது சந்தைப்படுத்தல் நிறுவனத்திற்கே விற்பனை செய்கின்றன. குறித்த சந்தைப் படுத்தல் நிறுவனங்கள் பெருத்த இலாபத்துடன் வெளியில் விற்பனை செய்கின்றன. ஆனால் உற்பத்தி நிறுவனம் ஈட்டும் இலாபம் மட்டுமே பெருந்தோட்ட நிறுவனங்களின் இலாபமாக காட்டப்பட்டு குறித்த நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன் மூலம் பெருந்தோட்ட நிறுவனங்களின் இலாபத்தில் தொழி லாளர்களுக்கான பங்கு இல்லாமல் செய்யப்படுகின்றது.

மேலும் அரச தோட்டங்கள் மிகவும் மோசமாக சீரழிக்கப்பட்டுள்ளன. இன்று அனைத்து தோட்டங்களிலும் உத்தியோகத்தர்களாக பெரும்பான்மை இனத்தை சேர்ந் தவர்களை கூடுதலாக நியமிக்கின்றனர். முகாமைத்துவ மட்டத்திலும் பெரும்பான்மை இனத்தவர்களின் ஆதிக்கமே காணப்படுகின்றது. இதனால் பெருந்தோட்டத்துறையில் படித்த மலையக இளைஞர்கள், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு மறுக்கப்படுவதோடு அவர்களை தொழில் நிமித்தம் பெருந்தோட்டங்களிலிருந்து வெளியில் தள்ளும் போக்கும் காணப்படுகின்றது.

பெருந்தோட்டத்துறையானது நவீன மயப்படுத்தப் படாமையானது தொழில் அந்தஸ்து பற்றிய வினாவை யும் மலையக படித்த இளைஞர், யுவதிகளிடையே எழுப்பியுள்ளது. இவ்வாறான திட்டமிட்ட செயற்பாடுகள் மூலம் வேலைவாய்ப்புத் தேடி மலையகத் தமிழர் தலை நகரை நோக்கியும் குடிபெயர்ந்து செல்ல அவ்விடங்களை கிராமப்புற சகோதர சிங்களவர்களை கொண்டு நிரப்பும் முயற்சிகளும் இடம்பெறுகின்றன. இந்தக் குடிபெயர்வுகள் குடும்பமாக இடம்பெறும்போது மலையகத்தில் நிலத் துடனான சொந்தத்தை இழக்கின்ற நிலையும் காணப்படு கின்றது. இந்நிலையானது மலையகத் தேசியத்தை தீவிரமாக பாதிக்கத் தொடங்கியுள்ளது.

## மலையகத் தமிழரின் துணைப்பொருளாதார வளங்கள்

மலையகத்தமிழரின் துணைப்பொருளாதார வளங்களாக சிறு விவசாயம், கால்நடை வளர்ப்பு, சிறு வர்த்தகம், அரச வேலைவாய்ப்பு, மாணிக்கக்கல் அகழ்வு, சுற்றுலாத்துறை என்பன காணப்படுகின்றன. சிறு வர்த்தக மானது மலையகத்தில் பரவலாக மேற்கொள்ளப்பட்டாலும் இன்று பல நெருக்கடிகளை சந்திக்க தொடங்கியுள்ளது. விவசாய உற்பத்திகளுக்கான உள்ளீடுகளின் அதிகரித்த விலை, உற்பத்திகளுக்கு போதிய விலை கிடைக்காமை, இடைத் தரகர்களின் அபரிமிதமான இலாப உழைப்பு என நெருக்கடிகள் தொடர்கின்றன. கால்நடை வளர்ப்பில் நாட்டின் ஏனைய பிரதேச மக்களுக்கு கிடைப்பது போன்ற வசதிகளும், சலுகைகளும் மலையக தோட்டப்புற மக்களுக்கு கிடைக்காமையால் (பாலிற்கு உரிய விலை கிடைக்காமை, கால்நடை தீவனம் மற்றும் மருத்துவ வசதி களை பெறுவதிலுள்ள நெருக்கடிகள்) இன்று கால் நடை வளர்ப்போரின் எண்ணிக்கை குறைந்து செல்வதை காணலாம்.

அரச வேலைவாய்ப்புக்களில் ஆசிரியர்களே அதிகமாக உள்ளனர். இவர்களின் எண்ணிக்கை இன்று பத்தாயிரத்தை தாண்டி உள்ளது. இந்த நிலைக்கு யதன்சைட் ஆசிரியர் கலாசாலையும், ஸ்ரீபாத கல்வியி யதர் கல்லூரியிலும் முக்கிய பங்கு வகித்துள்ளன. ஐம்பது கோடி ரூபா செலவில் முழுக்க மலையகத் தமிழர் களுக்கென ஜேர்மன் நாட்டு மக்களின் நிதி உதவியில் கட்டிக் கொடுக்கப்பட்ட ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியும் இன்று முழுமையாக மலையக மக்களுக்கு கிடைக்க வில்லை. இங்கும் 25% கட்டாய இட ஒதுக்கீடு சிங்கள மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பெருந்தோட்ட தபால் ஊழியர்களாக (400பேர் வரையும்) கிராம உத்தியோகத்தர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்கள், அரசாங்க அலுவலகங்களில் உத்தி யோகத்தர்கள் என சிறு தொகையினரும் உள்ளனர். அரசாங்கத் தொழில்களைப் பொறுத்த வரையில் மலையகப் பிரதேசத்திற்கு வரும் தொழில்கள்கூட மலை யகத்தவர்களுக்கு கிடைக்காத நிலையே உள்ளது. சிற்றூழியர்களாக (சுத்திகரிப்பு தொழிலாளர்கள்) வேலைதான் ஓரளவுக்கு கிடைக்கின்றதே தவிர ஏனைய தொழில்கள் கிடைப்பது அரிதாகவே உள்ளது.

மலையகத்தின் எல்லாப் பிரதேசங்களும் சுற்று லாத்துறைக்குப் பொருத்தமான அழகான பிரதேசம். இதனால் இதன் மதிப்பு அதிகம், ஆனால் சுற்றுலாத் துறையின் ஆதிக்கம் மலையகத் தமிழரின் கைகளில் இல்லை. இது போன்றே உலகின் சிறந்த மாணிக்கக் கற்கள் இரத்தினபுரி, பதுளை, நுவரேலியா போன்ற மலையக மாவட்டங்களிலேயே கிடைக்கின்ற போதிலும் அதன் ஆதிக்கமும் மலையகத் தமிழரின்

கைகளில் இல்லை. வெறும் தொழிலாளர்களாகவே இவர்கள் உள்ளனர்.

மலையகத்தில் போதிய வளங்கள் இருந்த போதிலும் ஒழுங்கான திட்டங்கள் இல்லாததினால் மலையக மக்கள் வாழ்வாதாரத்திற்காக மலையகத்துக்கு வெளியே குடிபெயர்ந்து செல்லும் நிலையிலேயே உள்ளனர். இந்நிலையானது மலையகத்தமிழரின் தேசிய இருப்பை பெரிதும் பாதித்துள்து.

**முடிவுரை**

மலையக மக்களுடைய அடிப்படைப் பொருளா தாரம் பெருந்தோட்டத்துறைப் பொருளாதாரமே! இதைப் பாதுகாப்பதன் மூலமே மலையக தேசியத்தின் இருப்பை பாதுகாக்க முடியும். அதன்படி மலையக மக்களின் கூட்டடிருப்பையும், கூட்டுரிமையையும் தக்க வைக்க முடியும். இதற்கு மலையகத் தமிழரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதாக பெருந்தோட்டத்துறை கூட்டுறவு பொருளாதார முறைமைக்குள் கொண்டு வரப்படல் வேண்டும். இத்தொழிற்துறைக்குள் புலமை சார் ஆற்றலை உட்படுத்தி நவீன மயப்படுத்தல் வேண்டும். இது போன்று துணைப் பொருளாதார வளங்களையும் முழுமையாக மலையகத் தமிழரின் கைகளை விட்டுப் போகாத வகையில் பாதுகாத்தல் வேண்டும்.

கூட்டுறவு முறை ஊடாக ஒரு சமூக அதிகார மையத்தை கட்டியெழுப்புதல் வேண்டும். இதற்கு சிறந்த முன் உதாரணமாக யூத மதகுரு தியோடர் ஹர்சலினால் ஏற்படுத்தப்பட்ட "யூத நிதியம்" காணப்படுகின்றது. இந் நிதியத்தினூடாகவே சர்வதேச ரீதியாக நிதி திரட்டப்பட்டு இஸ்ரேலில் யூதர்கள் குடியேற்றப்பட்டு யூத ராஜ்ஜியம் கட்டி யெழுப்பப்பட்டது. பெருந்தோட்டத்துறையை பொறுத்த மட்டில் முதலில் தற்காப்பு நடவடிக்கையே அவசிய மாகும். அதாவது இருப்பதை பாதுகாப்பதாகும். பெருந் தோட்டத்திலிருந்து குடிபெயர்வைத் தடுத்து தோட்டத் துறைக் குடியிருப்புக்களை கிராமங்களாக மாற்றிய மைத்து பெருந்தோட்டங்களில் உள் வாழ்வை சீரமைக்கும் நிலையை உருவாக்குதல் வேண்டும். இதனூடாக வெளி யார் ஆக்கிரமிப்பை தடுக்க முடியும்.

இவற்றுக்கெல்லாம் கையில் அதிகாரம் வேண்டும். முதலில் படிப்படியாக அதிகாரத்தை பெறுவத னூடாகவே இதனை அடைய முடியும். இதற்காக பிரதேச சபைகளை அதிகரித்தல் பிரதேச சபைகள் பொறுப்புக்களை எடுத்தல். பெருந்தோட்டத்துறைக்கும் செல்லுபடி யாகும் வகையில் உள்ளூராட்சி அதிகார சபை சட்டமூலத்தின் 33வது பிரிவை மாற்றியமைத்தல், பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சை மீள செயற் படுத்தல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய தேவை இன்றுள்ளது. இவை தொடர்பான ஆரோக்கியமான உரையாடலை ஆரம்பிக்க வேண்டியது உடனடித் தேவையாகும்.

---

**(06 ஆம் பக்க தொடர்ச்சி)**

சூழலை எவ்வாறு ஏற்படுத்துவது போன்ற விடயங்களில் திறந்த கருத்துப்பரிமாற்றங்கள் அவசியம் தேவை.

மூன்று தசாப்தகால யுத்தம் காரணமாக பாரம்பரிய கால்நடை வளர்ப்புத் தொழிற்துறைகள் பாரிய அழிவைச் சந்தித்துள்ளன. எனினும் தற்போது இத்துறை மீண்டும் வடக்கு கிழக்கில் மீளெழுச்சி அடைகிறது. மேய்ச்சல் தரவைகள் அழிவடைந்துள்ளமை, விலங்குணவு உற்பத் தித் தொழிற்சாலைகள் மூடப்பட்டமை போன்றவை இத் துறையின் மீளெழுச்சிக்கு பாரிய தடையாக அமை கின்றன. அடம்பன் பண்ணை, சீர் உயிர்ப்பண்ணை போன்ற நிறுவனங்கள் ஒருங்கிணைந்த சேதனப் பண்ணை முறைமைகளை அறிமுகம் செய்வதற்கு எடு–த்து வரும் முயற்சிகள் பாராட்டுக்குரியவை. நன்னீர் மீன் வளர்ப்பு, அலங்கார மீன் வளர்ப்பு போன்ற துறைகளை நம மவரிடையே இனிமேற்தான் அறிமுகம் செய்ய வேண்டி யுள்ளது. இத்தொழிற்துறைகளில் தென்னிலங்கைக்கும் நமக்கும் இடையிற் பாரிய இடைவெளி காணப்படுகிறது. அலங்கார மீன் வளர்ப்பானது இலங்கையின் ஏற்றுமதி களில் முக்கிய இடத்தைப் பிடித்துவருகிறது. நாமோ இத்துறை பற்றி அடிப்படை புரிதலுமற்றுக் காணப்படுவது துரதிஸ்டவசமானதொன்று. புலம்பெயர் சமூகத்தின் நிதிப்பங்பளிப்புடன் உச்ச அளவிலான அறிவு, திறன் உள்ளீடுகளை மேற்கொண்டால் மாத்திரமே நாமும் ஏற்றுமதிக்கான ஏதுநிலைகளை உருவாக்கமுடியும்.

இக்கட்டுரையில் அடிப்படை வளங்களின் மேலாண்மை தொடர்பில் முறையான கொள்கைவகுப் பின் அவசியம் பற்றியும், அடிப்படை வளங்களைச் சார்ந் தியங்கும் முதனிலைக் கைத்தொழில்களின் மேம்பாடு பற்றியும் விரிவாக ஆராய்ந்தோம். இவ்விடயம் சார்ந்த தளத்தில் கடந்த பத்தாண்டுகளாக செயற்பட்டு வருவதில் இருந்து பெற்ற அனுபவங்கள், அனுபவங்களிலிருந்து கிடைத்த படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்டே இக்கட்டுரையை வரைந்துள்ளேன். இவ்விடயங்கள் தொடர்பில் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொள் வதுடன் தாயகத்தில் காத்திரமான செயற்திட்டங்களை முன்னெடுக்கவும் விரும்புகின்றேன். அதற்கான வாய்ப்புக் களை இக்கட்டுரை நிச்சயம் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஒவ்வொரு பிடிமண்ணும் ஒவ்வொரு துளி நீரும் நம் உயிருக்கு ஆதாரம் என்பதை நினைவிற் கொண்டு செயற்படுவோம்!

**(யாழ் இந்துக்கல்லூரியின் அவுஸ்ரேலியா - மெல்பேர்ன் பழைய மாணவர் சங்க வருடாந்த 2017 இதழில் வெளியான கட்டுரை)**

# கூட்டாகக் குரல் கொடுக்கும் போதே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை சாத்தியம்

அரசியல் கைதிகள் விடுதலைக்காக தமிழ் மக்கள் முன்னரை விட முனைப்பாகப் போராட ஆரம்பித்துள்ளனர். அரசியல் கைதிகளுக்காக போராட்டங்கள், வீதி மறியல்கள், ஹர்த்தால் என்று தமிழர் தாயகம் கொந்தளிப்பாகியுள்ளது. யாழ், கிழக்கு பல்கலைக்கழக சமூகங்களும் பல்வேறு தளங்களில் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகின்றன. அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் தீர்மானகரமான முடி வெடுக்கும் நிலையில் உள்ள ஜனாதிபதியோ அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தை ஒத்திப் போட்டு வருகிறார்.

“சில அரசியல் கட்சிகள் மக்களின் பிரச்சனை களை தீர்த்துவைக்க முயலாமல் அதை தமக்கு சார்பான அரசியலுக்கு பயன்படுத்துகின்றனர். பிரச்சனைகள் தீர்க்கப்படவேண்டும் என்ற எண்ணத் துடன் அவர்கள் இவ்விடயங்களை அணுகவில்லை. இவவாறான காரணங்களினால் தான் இந்த விடயத் தினை நாம் கையிலெடுத்துள்ளோம்.” என தெளிவாக யாழ் பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர் ஒன்றி யத்தினர் 20.10.2017 பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்திருந்தனர்.

அன்று சமூக விடுதலைக்காக சிலுவை சுமந்த நாம் இன்று சரீர விடுதலைக்காக போராடும் நிலை ஏற்பட்டுள்ளது. எம்மவர் சாதனைகளைச் சொல்லி கதிரையேறிய கதாபாத்திரங்கள் கண்மூடிச் செயற் படுகின்ற இவ்வேளையில் கல்விச் சமூகம், பல்கலைக் கழக சமூகம் எமக்கான விடுதலை நோக்கிய போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்று அரசியல் கைதிகள் அண்மையில் ஊடகங்களுக்கு அனுப்பிய கடிதமொன்றில் உருக்கமாக குறிப்பிட் டுள்ளனர்.

அரசியல் கைதிகள் விவகாரத்தை அர சாங்கமோ வடக்கு மக்களின் பிரச்சினையாகவும், பயங்கரவாதத்தோடு தொடர்புபட்ட பிரச்சினை யாகவும் மட்டுமே பார்க்கின்றது. சிறைகளில் வாடும் பலரும் விளங்காத மொழியில் எழுதப்பட்ட விடயங்களை ஒப்புக்கொண்டு கையெழுத்திடுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். தாம் இன்ன காரணத்துக் காக தான் சிறைகளில் வாடுகிறோம் என்கிற விடயமே தெரியாத பலர் சிறைகளில் வாடுகின்றனர். இவர் களின் விடுதலைக்காக கூட்டாக தமிழ் சமூகம் குரல்



கொடுக்கவில்லை என்கிற குற்றச்சாட்டு உள்ளது. இவர்களுக்கு தண்டனை வழங்குவதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டுக்கு தண்டனை வழங்குவது தான் அரசின் நோக்கம். தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டுக்கு தண்டனை வழங்குவ தென்ற இந்த நிலையை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பும் ஏற்றுக் கொள்கிறதா? இல்லையென்றால் இவர்களின் விடுதலைக்கு ஆக்கபூர்வமான நடவடிக் கைகளை எடுக்க வேண்டும். சிவில் சமூகங்களின் தலைமைத்துவம் அரசியல் தலைமைத்துவங்களுக்கு அழுத்தம் கொடுக்கக் கூடிய நிலைக்கு வர வேண்டும். அரசியலில் அடிமட்ட தலைமைத்துவம் வெளியில் வர வேண்டும். உதாரணமாக இயக்கங்கள் உருவாகிற காலத்தில் அவர்கள் ஒரு அமைப்புக்குள் வந்தவுடன், அரசியல் தலைமைத்துவங்கள் எல்லாம் பின்னால் போகிற நிலை இருந்தது. கீழே இருக்கிறவர்கள் மேலே வரும் போது மேலே இருக்கிறவர்கள் வெளியே தள்ளப்படுகிறார்கள். அப்படியானதொரு அரசியல் கலாச்சாரத்தை உருவாக்குகின்ற நிலைக்கு நாங்கள் தற்போது தள்ளப்பட்டுள்ளோம். இப்போது இருக்கிற தலைமைத்துவங்களை நம்பிக் கொண்டு போனால் எங்களுக்கு எதிர்காலம் கிடையாது. என “அரசியல் கைதிகள் விடுதலைக்கான தேசிய இயக்கம்” எனும் அமைப்பின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை சக்திவேல் நிமிர்வின் வைகாசி இதழுக்கு பேட்டியளிக்கும் போது அழுத்தம் திருத்தமாகவே குறிப்பிட்டிருந்தார்.

சிறைகளுக்குள் வாழும் இந்த அரசியல் கைதிகளின் குடும்பங்களோ மோசமான நிலையில் உள்ளன. குடும்ப உறவுகள் அன்றாடம் வாழ்க்கையை கொண்டு நடாத்தவே மிகவும் சிரமப்படுகின்றன. பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கிய நிலைக்கு தள்ளப்பட்டு விட்டனர். எமது தமிழ் சமூகம் இவர்களின் விடுதலைக்கு தொடர்ந்து கூட்டாக குரல் கொடுக்கும் போது தான் ஒட்டுமொத்த விடுதலை என்பது சாத்தியமாகும்.

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 25.10.2017 அன்று ஜெயசிறீ அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.